# வானவில்

**VAANAVIL**


| இதழ் 103 | ஆடி | 2019 |
|---|---|---|
| ISSUE 103 | JULY | 2019 |


# அரசாங்கம் ஜே.வி.பி. மூலம் வைத்த பொறியில் சிக்கிக்கொண்டதா எதிர்க்கட்சி?

இலங்கை நாடாளுமன்றத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் ஆட்சி நடத்தும் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கு எதிராக ஜனதா விமுக்தி பெரமுனவினால் (மக்கள் விடுதலை முன்னணி – ஜே.வி.பி.) கொண்டுவரப்பட்ட நம்பிக்கை இல்லாத் தீர்மானம் 27 மேலதிக வாக்குகளால் தோற்றுப்போனது. இது ஏற்கெனவே எதிர்பார்க்கப்பட்ட ஒன்று.

ஏனெனில், ஐ.தே.க. அரசாங்கத்துக்கு ஆபத்து நேரும்போதெல்லாம் அதன் பாரம்பரிய சகபாடியான தமிழ்த்தலைமை – தற்போது அது தமிழ் தேசியக் கூட்டமைப்பு – முண்டு கொடுத்து காப்பாற்றிவிடுவது வழமை. இந்தமுறையும் அதுதான் நடந்தது.

எதிரணிக்கு 95 உறுப்பினர்கள்வரை இருந்தும், அதனுடன் சேர்த்து ஜே.வி.பியின் 6 உறுப்பினர்கள் சேர்ந்து வாக்களித்தும் நம்பிக்கை இல்லாத் தீர்மானத்துக்கு 92 உறுப்பினர்களின் ஆதரவு மட்டுமே கிடைத்துள்ளது. அதேநேரம் தீர்மானத்துக்கு எதிராக 119 பேர் வாக்களித்துள்ளனர். 13 பேர் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை.




அதற்குக் காரணம், எதிரணியைச் சேர்ந்த சில முக்கியமான உறுப்பினர்கள் வாக்களிப்பில் கலந்துகொள்ளவில்லை. முக்கியமாக அரசை கடுமையாக எதிர்த்து வரும் பிவிதுரு ஹெலஉருமயவின் தலைவர் உதய கம்மன்பில வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அவர் கலந்து கொள்ளாமைக்கான காரணம் என்னவென இதுவரை தெரியவராதபோதிலும், ஐ.தே.கவை எதிர்க்கும் அதேயளவுக்கு கம்மன்பில ஜே.வி.பியையும் எதிர்ப்பதால், ஜே.வி.பி. கொண்டு வந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை அவர் ஆதரிக்காமல் விட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

வாக்களிப்பில் கலந்துகொள்ளாத இன்னொரு முக்கிய பிரமுகர் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளர் துமிந்த திசாநாயக்க. அவர் கலந்து கொள்ளாதது புதுமையல்ல. ஏனெனில் அவர் சுதந்திரக் கட்சியில் முக்கிய பதவிகள் வகித்துக்கொண்டே ஐ.தே.கவுக்காக வேலை செய்து வருபவர்.

வாக்களிப்பில் கலந்துகொள்ளாத இன்னொருவர் கம்யூனிஸ்ட் கட்சியின் மாத்தறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசிறி கஜதீர. அவர் கலந்து கொள்ளாமைக்கான காரணமும் என்னவெனத் தெரியவரவில்லை. ஆனால் ஏனைய இடதுசாரிக்கட்சிகளான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தலைமையிலான லங்கா சமசமாஜக் கட்சி, வாசுதேவ நாணயக்கார தலைமையிலான ஜனநாயக இடதுசாரி முன்னணி என்பவை போல கம்யூனிஸ்ட் கட்சி எதிரணியுடன் எல்லா விடயங்களிலும் ஒன்றுபட்டுச் செயற்படாதது ஒரு காரணமாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது.

வாக்களிப்பில் கலந்துகொள்ளாத இன்னொருவர் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா. தேவானந்தா எதிரணியுடன்

தொடர்ச்சி 14ம் பக்கம் பார்க்க...

**நூறு சிந்தனை மலரட்டும்**

# முறிகள் மோசடிக் குற்றவாளிகளைப் பாதுகாக்கும் தற்போதைய அரசாங்கம்

**இ**லங்கையின் வரலாற்றில் இடம்பெற்ற மிகப்பெரிய மோசடியான மத்திய வங்கி முறிகள் மோசடி (Bond Scam) இடம்பெற்று நான்கு வருடங்களுக்கு மேலாகிவிட்டன. இந்த மோசடி தொடர்பிலான வழக்கின் முதலாவது பிரதிவாதியான அர்ஜூன மகேந்திரனைக் கைது செய்வதற்கான பிடியாணை பிறப்பிப்பது தொடர்பிலான உத்தரவை ஒகஸ்ட் மாதம் 9ஆம் திகதி பிறப்பிப்பதாக மேல் நீதிமன்றம் 24.07.2019 இல் அறிவித்துள்ளது.

2015 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 27ஆம் திகதியே இந்த மோசடி இடம்பெற்றது. 26.01.2015 இல் மத்திய வங்கியின் ஆளுநராக பதவியேற்ற அர்ஜூன மகேந்திரனின் பதவி, 30.06.2016 இல் முடிவுக்கு வந்தது. இவர் ஆளுநராக பதவி வகித்தபோது, நிதியைத் திரட்டிக்கொள்ளும் முகமாக, 30 வருடங்களில் முதிர்ச்சியடையும் ஒரு பில்லியன் ரூபா பெறுமதியான முறிகளை விநியோகிப்பதாக அறிவித்தார். ஏலத்தின் நிறைவில் 20 மடங்கு அதிகரிக்கப்பட்டு, 20 பில்லியன் ரூபா வரை முறிகளை விநியோகிப்பதற்கு இவர் தீர்மானித்தார். எனினும் மத்திய வங்கி அதிகாரிகளின் எதிர்ப்பினால் அது 10 பில்லியன் ரூபாவாகக் குறைக்கப்பட்டது.

முதலீட்டாளர்கள் பலரும் அரச முறிகளை வாங்க ஆர்வம் காட்டியிருந்தார்கள். இவர்களில் பெரும்பாலானோர் அரச முறிகளை 9.5 சதவீதத்திலிருந்து 10.5 சதவீதம் வரை பெற்றுக்கொள்ள விரும்பியிருந்தனர். எனினும் 5 பில்லியன் ரூபாய் பெறுமதியான முறி, 12.5 எனும் வழமைக்கு மாறான வட்டி வீதத்திற்கு அமைவாக Perpetual Treasuries நிறுவனத்திற்கு (இந்நிறுவனத்தின் அப்போதைய நிறைவேற்றுப் பணிப்பாளர் அர்ஜூன் அலோசியஸ், அர்ஜூன மகேந்திரனின் மருமகன் என்பது குறிப்பிடத்தக்கது) வழங்கப்பட்டது. இது, குறைவான வட்டி விகிதத்தில் முறிகளைப் பெற்றுக்கொள்ள விரும்பியவர்களை ஓரங்கட்டி விநியோகிக்கபட்டதாக உள்ளது.

இது தொடர்பான தகவல்கள் அப்போதைய ஊடகங்கள் வாயிலாக தலைப்புச் செய்திகளாக வெளியாகி மக்களின் கருத்துகள் மேலோங்கியபோது, 2015 மார்ச் 17 ஆம் திகதி தாம் முறிகள் விநியோக நடைமுறையை மாற்றுவதற்கு கட்டளையிட்டதாக, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றத்தில் அறிவித்தார். பின்னர், ஐக்கிய தேசியக் கட்சியுடன் தொடர்புடைய சிலரை உள்ளடக்கி பிரதமர் ஒரு குழுவை நியமித்தார். அந்தக் குழு அர்ஜூன மகேந்திரனை அனைத்துக் குற்றச்சாட்டுக்களிலிருந்தும் விடுவித்தது.

பின்னர் இந்த விடயம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு அப்போதைய சபாநாயகர் சமல் ராஜபக்ஸ, 'கோப்' (COPE - Committee On Public Enterprises) குழுவின் தலைவராக இருந்த டியு குணசேகரவிற்கு அறிவித்தார். அக்குழுவின் அறிக்கை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முதல்நாள், அதாவது 2015 ஆம் ஆண்டு ஜூன் 26 ஆம் திகதி, பாராளுமன்றம் கலைக்கப்பட்டது. பிரதமர் வழங்கிய ஆலோசனைகளையே தாம் நடைமுறைப்படுத்தியதாக, மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் வழங்கிய வாக்குமூலம் மூழ்கடிக்கப்பட்ட அந்த 'கோப்' அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்தது என்பது முக்கிய விடயமாகும்.

2015 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி புதிய அரசாங்கம் ஆட்சிக்கு வந்தவுடன், சுனில் ஹந்துன்நெத்தி (Sunil Handunnetti) புதிய 'கோப்' தலைவராக தெரிவு செய்யப்பட்டார். அவர் தலைமையில் 2015 ஆம் ஆண்டு நவம்பர் 26 ஆம் திகதி மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டன. இதற்கிடையே, 2016 ஆம் ஆண்டு மார்ச் 29 மற்றும் 30 ஆம் திகதிகளில் சர்ச்சைக்குரிய மேலும் இரண்டு முறிகள் கொடுக்கல், வாங்கல்கள் இடம்பெற்றதாகக் கூறப்படுகின்றது.

சுனில் ஹந்துன்நெத்தி தலைமையிலான 'கோப்' குழு அறிக்கையில ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களின் தலையீடுகள் இருந்தன. அடிக்குறிப்புகள் மற்றும் பரிந்துரைகளில் ஐ.தே. கட்சியினர் தாக்கம் செலுத்தியதாக பலரும் சுட்டிக்காட்டினர். அதனால் பல எதிர்ப்புகளுக்கு மத்தியில், ஜனாதிபதியால் ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டது. 2017ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 30 ஆம் திகதி ஆணைக்குழுவின் அறிக்கை ஜனாதிபதியிடம் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கையின் அடிப்படையிரேயே அர்ஜூன மகேந்திரன், அர்ஜூன் அலோசியஸ் உள்ளிட்ட 10 பிரதிவாதிகளுக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் குற்றப்பத்திரம் தாக்கல் செய்து, வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இவ்விசாரணையில் அர்ஜூன் அலோசியஸ் நிறுவனத் தலைவராக உள்ள Walt and Row நிறுவனத்தின் ஊடாக, அப்போதைய நிதியமைச்சரான ரவி கருணாநாயக்கவின் வசிப்பிடத்துக்கு வாடகை வழங்கப்பட்டு வந்தமையும் கண்டறியப்பட்டுள்ளது. குறித்த வீடு ஆறுமாத காலங்களுக்கு 11.6 மில்லியன் ரூபாய் என்ற அடிப்படையில் ஒப்பந்தம் செய்யப்பட்டு, பின்னர் 165 மில்லியன் ரூபாவிற்கு ரவி கருணாநாயக்கவின் குடும்பத்தினருக்கு விற்பனை செய்யப்பட்டுமுள்ளது.

இலங்கை வரலாற்றில் மிகப்பெரிய மோசடி இடம்பெற்று 4 வருடங்கள் பூர்த்தியானாலும், இது தொடர்பில் பொறுப்பு கூறுவதற்கு தற்போதைய அரசாங்கத்திலிருந்து இதுவரை எவரும் முன்வரவில்லை. அத்துடன் அனைத்துக்கும் பதில் சொல்ல வேண்டியவர் பிரதமராக இன்னமும் பதவியில் இருப்பதுதான் வேடிக்கையாக உள்ளது. மோசடிக்கு பொறுப்புச் சொல்லவேண்டிய அரசும் கலைக்கப்படாமல் இருக்கின்றது. கடந்த வருடம் ரணில் விக்கிரமசிங்க பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டு, ஐ.தே.கட்சி தலைமையிலான அரசு கலைக்கப்பட்டதின் பின்னணியில் முறிகள் மோசடி விவகாரமும் இருந்தது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.


**தொடர்பு மின்னஞ்சல் முகவரி:** sunvaanavil@gmail.com

'வானவில்' இதழுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புபவர்களும், இதழ்களைப் பெற்றுக்கொள்ள விரும்புபவர்களும் மற்றும் அனைத்துத் தொடர்புகளுக்கும் மேலுள்ள மின்னஞ்சல் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்:

வானவில்

**இணையத்தளம்:** http://manikkural.wordpress.com/ **இந்த இணையத்தளத்தில் இதுவரையில் வெளிவந்த அனைத்து வானவில் இதழ்களையும் வாசிக்கலாம்.**

# அமெரிக்காவை வரவழைக்கும் ஐ.தே.கவுடன் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இணையக்கூடாது!

## -யாழ்ப்பாணத்தில் பேராசிரியர் திஸ்ஸ விதாரண

"ஐக்கிய தேசியக்கட்சி இலங்கையில் அமெரிக்கத் தலையீட்டைக் கோருவதால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு அக்கட்சியுடன் கூட்டு வைக்கக்கூடாது" என வலியுறுத்தியுள்ளார் லங்கா சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலாளர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண. அண்மையில் யாழ்ப்பாணத்தில் முகாமைத்துவ அரங்கில் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில், தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தமிழ் தலைவர்கள் முதலில் தாம் இலங்கையர்கள் என்றே சிந்திக்க வேண்டும், அதன்பின்னரே தாம் தமிழர்களால் நாடாளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் என எண்ண வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் அங்கு உரையாற்றுகையில் கூறியதாவது:

இலங்கையில் உயிர்த்த ஞாயிறு அன்று நடத்தப்பட்ட பயங்கரவாதத் தாக்குதல்களின் உண்மையான தலைவர் பலரும் கருதுவது போல சஹ்ரான் அல்ல. அவருக்குப் பின்னால் இருந்த உண்மையான தலைவர் யார் என்பதை நாம் கண்டுபிடிக்க வேண்டும். நன்கு திட்டமிடப்பட்டு ஒருங்கிணைக்கப்பட்ட இந்தத் தாக்குதலின் பின்னால் சக்திவாய்ந்த சர்வதேசச் சக்தியொன்று செயல்பட்டுள்ளதாக பொதுவாக பலரும் ஏற்றுக்கொள்கின்றனர்.
ஐ.எஸ்.ஐ.எஸ்.தான் இதன் பின்னால் உள்ளது என்றால் அங்கு பல கேள்விகள் எழுகின்றன. 'குளோபல் றிசேர்ச் ஜேர்னல்' என்ற சஞ்சிகையில் ஹாவார்ட் பல்கலைக்கழக புலமையாளர் எழுதிப் பிரசுரிக்கப்பட்டுள்ள கட்டுரையொன்றில், ஐ.எஸ்.ஐ.எஸ். உட்பட அல்கைடா மற்றும் தலிபான் போன்ற இஸ்லாமிய தீவிரவாத இயக்கங்களுக்கு அமெரிக்காவே ஆயுதங்கள் வழங்கி பயிற்சியும் அளித்துள்ளது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. மத்திய கிழக்கில் இஸ்லாமிய அரசொன்றை அமைக்கப்போவதாக நம்பிக்கை கொண்டுள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு



முஸ்லீம் மக்களின் பிரதான எதிரி நாடான இஸ்ரேலில் இதுவரை ஒரு குண்டைத்தானும் வெடிக்க வைக்கவில்லை. அப்படியிருக்க 2 கோடி சனத்தொகை கொண்ட இலங்கையில் வெறுமனே 10 சதவீதம் மட்டுமே முஸ்லீம் சனத்தொகை கொண்ட இலங்கை போன்ற சிறிய நாட்டில், இஸ்லாமிய அரசொன்றை அமைக்க முடியாத நாட்டில் ஏன் அவர்கள் குண்டுகளை வெடிக்க வைக்கின்றனர்? சிரியாவில் 2019 மார்ச் 19இல் ஐ.எஸ்.ஐ.எஸ். தோற்கடிக்கப்பட்டு நசுக்கப்பட்டு ஒரு மாதம் கழித்து ஏப்ரல் 21ஆம் திகதி இலங்கையில் தாக்குதல் நடத்தியிருக்கின்றனர். ஆனால் அமெரிக்காவும் இலங்கை அரசாங்கமும் இந்தத் தாக்குதல் சர்வதேச பயங்கரவாத அமைப்பான ஐ.எஸ்.ஐ.எஸ் இடமிருந்து வந்ததாக உரத்துக் கூறியபின்னர் இரண்டு நாட்கள் கழித்துத்தான் அவ்வமைப்பு வழமைக்கு மாறாக உரிமை கோரியுள்ளது. இது ஏன்?

### சுப்பராயன்

பொருளாதார மற்றும் தந்திரோபாய காரணங்களுக்காக அமெரிக்கா இலங்கை மீது பெரும் அக்கறை கொண்டுள்ளது. அமெரிக்காவின் பொம்மை அரசாங்கமான ஐ.தே.க. அரசாங்கம், உலகளாவிய ஆட்சி மாற்றம் என்ற அமெரிக்க கொள்கைக்கு ஏற்ப 2015இல் தேசியவாத மகிந்த ராஜபக்ச அரசாங்கத்தைத் தோற்கடித்த பின்னர், அமெரிக்கா நாடுகளைத் தங்குதடையின்றிச் சுரண்டுவதற்கான நவதாராளவாதக் கொள்கையைப் பின்பற்றி வருகின்றது. அதன்பின்னர் இலங்கையின் வடக்கிலும் தெற்கிலும் வாழ்கின்ற மக்கள் கடுமையான பொருளாதாரப் பிரச்சினைகளை எதிர்கொண்டு வருகின்றனர். டியோக்கோ கார்சியாவில் உள்ள தனது இராணுவத்தளத்தை இழக்கும் சூழலில் இந்து சமுத்திரத்தைக் கட்டுப்படுத்துவதற்கு இலங்கையை மாற்றுத் தேர்வாக அமெரிக்கா கருதுகின்றது. அதனால் ஐ.தே.க. தொடர்ந்தும் அதிகாரத்தில் இருக்க வேண்டும் என அமெரிக்கா விரும்புகிறது. தேர்தலில் ஏற்படப்போகும் தோல்வியைத் தவிர்ப்பதற்காகவே பயங்கரவாதத்தை எதிர்க்கும் சட்டம் என்ற போர்வையில் சட்டமொன்றைக் கொண்டு வந்து அதை நாடாளுமன்றமும் மக்களும் ஏற்க வைக்க முயற்சிக்கப்படுகிறது. இந்தக் காட்டுமிராண்டித்தனமான சட்டம் தேர்தல்கள் நடத்துவதை இல்லாமல் செய்து, நாடாளுமன்ற ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்து, நாட்டில் பொலிஸ் இராஜ்யம் ஒன்றை ஏற்படுத்துவதற்கான மூலப்பிரதியாகும். ஏப்ரல் 21ஆம் திகதி பயங்கரவாதத் தாக்குதல் மூலம் முஸ்லீம்களுக்கு எதிரான வன்முறையைக் கட்விழ்த்துவிட்டு அதன்மூலம் இந்த பயங்கரவாதத்தை எதிர்க்கும் சட்டத்தை நியாயப்படுத்துவதற்கு முயற்சிக்கப்படுகிறது என்பது எல்லோருக்கும் நன்கு தெரியும். ஆனால் வன்முறையை எதிர்க்கும் இலங்கையின் உண்மையான புதல்வரன கார்டினல் மல்கம் ரஞ்சித் அவர்களின் உறுதியான நடவடிக்கை காரணமாக இந்தத்திட்டம் நிறைவேறாமல் இருக்கின்றது. அதன்பின்னர் ஐ.தே.க. காடையர்கள் நீர்கொழும்பிலும் ஏனைய இடங்களிலும் முஸ்லீம்களின் இடங்களில் தாக்குதல்களை நடத்தியதுடன் ஏனைய இடங்களுக்கும் அதைக் கொண்டு சென்றனர். அரசாங்கம் இதை ஊக்குவித்தது. இதன்மூலம் அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஆளுநர்கள்

ஹிஸ்புல்லா மற்றும் ஆசாத் ஆகியோரை குற்ற விசாரணைப் பிரிவு விசாரிப்பதில் தடங்கல் ஏற்படுத்தியது.

சாலியும், விடுதலை செய்யப்பட்ட முஸ்லீம் விரோத தீவிரவாதியான கலகொடத்த ஞானசார தேரோவும் எரிமிற நெருப்பில் எண்ணெயை ஊற்றி சமூகத்தின் எல்லா மட்டத்திலும் அச்சத்தை அதிகரித்துள்ளனர். பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து இழப்புகளை மேலும் அதிகரிப்பதற்கு அரசாங்கம் அளித்துவரும் ஆதரவு 2015 சதித்திட்டத்தின் தொடர்ச்சியைக் காட்டுவதுடன், 1983இல் ஜே.ஆரின் அரசாங்கம் அப்பாவித் தமிழர்கள் மீது கட்டவிழ்த்துவிட்ட கறுப்பு யூலை சம்பவம் போன்ற ஒன்றை முஸ்லீம்கள் மீது அரங்கேற்றுவதற்கு முயற்சிப்பதையும் காட்டுகின்றது. அதன் காரணமாக அப்பொழுது தமிழீழ விடுதலைப் புலிகளின் பயங்கரவாதம் உருவாகியது. இப்பொழுது மத்திய கிழக்கில் இஸ்ரேல் மற்றும் அமெரிக்காவின் முக்கிய கூட்டாளியான சவூதி அரேபியாவின் அடிப்படைவாத வகாபி பிரிவின் சார்பாக உருவான தேசிய தவ்ஹீத் ஜமாத் அமைப்பின் ஜிகாத் பயங்கரவாதம் உருவாகியுள்ளது.

நிலைமைகள் மோசமடையும் சூழலில் அரசாங்கம் SOFA என்ற ஒப்பந்தம் ஒன்றை அமெரக்காவுடன் செய்து அதன்மூலம் அமெரிக்கப்படைகள் இராஜதந்திர சலுகையைப் பயன்படுத்தி விசா இன்றி இலங்கைக்குள் நுழையவும் இலங்கையின் எந்தவொரு இராணுவத்தளத்தைப் பயன்படுத்தவும் வசதி ஏற்படுத்தியுள்ளது. இலங்கை அமெரிக்காவின் இன்னொரு மாகாணமாக வர இருக்கிறது. இதன்மூலம் ஐ.எஸ்.ஐ.எஸ். சுர்வதேச பயங்கரவாத அமைப்பென்று கூறிக்கொண்டு அரசாங்கத்தின் அனுமதியின்றி அமெரிக்க இராணுவம் இலங்கைக்குள் நுழைய முடிகின்றது. அதன்பின்னர் அவர்கள் இலங்கையை ஈராக், சிரியா போன்ற யுத்தகளமாக மாற்றுவாரகள்.

இந்தப் பயங்கரமான அபாயத்தை எதிர்கொள்வதற்கு நாடும் மக்களும் ஒரே இலங்கைத் தேசமாக ஐக்கியப்பட்டு எழுந்துநின்று இந்தச் சதித்திட்டத்தை முறியடிக்க வேண்டும். ஆனால் தூரதிஸ்டவசமாக தமிழ் தேசியக் கூட்டமைப்பு, சிறீலங்கா முஸ்லீம் காங்கிரஸ், அகில இலங்கை முஸ்லீம் காங்கிரஸ் என்பன ஐ.தே.கவின் மக்கள் விரோதக் கொள்கைகளை ஆதரிக்கின்றனர்.

ஆனால் தமிழ் தேசியக் கூட்டமைப்பு வடக்கிலோ அல்லது வேறு பகுதிகளிலோ வாழும் தமிழ் மக்களின் நலன்களுக்காக செயல்படாது பணக்கார தமிழ் மேட்டுக்குடியினருக்காக செயல்படுவதுடன், நாட்டின் சனத்தொகையில் ஒரு வீதமாக மட்டுமேயுள்ள, அமெரிக்காவுக்கு சேவகம் செய்கின்ற சிங்கள மற்றும் முஸ்லீம் மேட்டுக்குடியினருடனும் சேர்ந்து செயல்படுகின்றனர். இது முதலில் இலங்கையர்களாகவும் பின்னரே தமிழர்களாகவும் சிந்திக்கின்ற உண்மையான தமிழ் தலைமை ஒன்றை நாடாளுமன்றத்துக்கு தெரிவு செய்யும் அவசியத்தை இந்த நிலைமை உணர்த்துகின்றது.

அமெரிக்காவும் அதன் 1 வீதமான பணக்கார ஆதரவாளர்களும் எமது நாட்டைச் சுரண்டுவதிலிருந்து விடுபடுவதற்கும், 99 வீதமான மக்கள் 'பிரித்து ஆளுதல்' என்ற அடிப்படையில் இன, மத அடிப்படையில் ஒருவரோடொருவர் சண்டையிடுவதில் இருந்து விடுபடுவதற்கும் இதுதான் ஒரேவழி. பயங்கரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து ஜனாதிபதி சர்வகட்சித் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டியபோது திரு.சம்பந்தன் முஸ்லீம்களின் பிரச்சினைகளைப் பற்றியோ அல்லது நாட்டின் இதர பிரச்சினைகளைப் பற்றியோ ஒரு வார்த்தைதன்னும் பேசாமல் கடந்த நான்கு வருடங்களாக எதுமே செய்யப்படாமல் இருக்கும் தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையைப்பற்றி மட்டுமே பேசினார் என்பதை நான் இங்கு மனவருத்தத்துடன் குறிப்பிட விரும்புகிறேன்.

புதிய அரசியல் சாசனம் தயாரிப்பதில் திருவாளர் சம்பந்தனுக்கு முன்னணிப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ள போதிலும், ஐ.தே.க. அரசாங்கத்தை தோற்கடிக்க முடியாமல் தமிழ் தேசியக் கூட்டமைப்பு பாதுகாக்கின்றபோதும், அதனால் எந்தத் தீர்வும் கிட்டவில்லை. அதுமாத்திரமின்றி, மாபெரும் அபாயமான ஜிகாத் பயங்கரவாதம் பற்றி விவாதிக்கும் போது சம்பந்தன் தமிழ் தேசிய இனப்பிரச்சினை பற்றிப் பேசுகின்றார். அரசாங்கத்தையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பையும் பொறுத்தவரை தேசிய இனப்பிரச்சினை தீர்க்கப்படாமல் இருக்கும்வரை வாக்குச் சேகரிப்பதற்கு அது ஒரு கருவியாக இருக்கும் என்பதே உண்மையாகும்.

எனவே லங்கா சமசமாஜக்கட்சி மற்றும் சோசலிச கூட்டமைப்பு போன்ற இடதுசாரிகளுடனும், முற்போக்கான தமிழ் கட்சிகளுடனும் இணைந்து செயல்படுவதன் மூலம் அடுத்ததாக ஏற்படப்போகும் மகிந்த ராஜபக்ச தலைமையிலான அரசாங்கத்தில் சர்வகட்சி சுட்டத்தில் முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும் என்பதைத் தமிழ்மக்கள் உணர வேண்டும். இதுதான் தமிழ் பேசும் மக்களைப் பொறுத்தவரை உண்மையான நம்பிக்கையளிக்கும் விடயமாகும்.

**"1972- எதிர்ப்புரட்சியும் கிளர்ச்சியும் (1972 Counter-revolution and Revolt) என்ற தனது நூலின் முகவுரையில் ஹெர்பெர்ட் மார்க்யூஸ் (HERBERT MARCUSE) கீழ்க்கண்டவாறு தெரிவித்திருந்தார்:**

"மேற்கத்திய உலகம் தனது வளர்ச்சிப் போக்கின் புதியதொரு கட்டத்தை எட்டியுள்ளது. முதலாளித்துவ உலகைப் பாதுகாக்க, உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் அவர்களுக்கு எதிர்ப்புரட்சி அமைப்புகள் தேவைப்படுகின்றன. அதன் தீவிர வெளிப்பாடாகவே நாஜிகளின் ஆட்சியின் போது நிகழ்த்தப்பட்ட கொடூரமான செயல்கள் மீண்டும் அரங்கேற்றப்படுகின்றன. கம்யூனிஸ்டுகளுக்கு எதிராகவும், ஏகாதிபத்திய அடிவருடி அரசுகளை எதிர்த்து நடைபெறும் கிளர்ச்சிகளை ஒடுக்குவது என்ற போர்வையில், இந்தோ சீனா, இந்தோனேசியா, கொங்கோ, நைஜீரியா, பாகிஸ்தான், சூடான் போன்ற நாடுகளில் மனிதப் படுகொலைகள் நிகழ்த்தப்பட்டன. இலத்தீன் அமெரிக்க நாடுகளில் பாசிச, இராணுவ சர்வாதிகாரிகளால் கொடூரமான வன்முறை ஏவப்பட்டது. உலகம் முழுவதும் விசாரணை என்ற பெயரில் சித்திரவதை செய்வது சர்வ சாதாரணமானதொரு நிகழ்வாக மாறிப்போனது. மேற்கத்திய கலாச்சாரம் உச்சத்தில் இருந்தபோது உருவான மதப்போர்கள் மன உளைச்சலை உருவாக்கி, பணக்கார நாடுகள் ஏழை நாடுகளுக்கு ஆயுதம் வழங்கி நிரந்தரமாக தேச, சமூக விடுதலைக்கான எழுச்சிகளை ஒடுக்க உதவி புரிந்தன. எதிர்ப்புரட்சி பெரும்பாலும் ஒரு தடுப்பு நடவடிக்கையாகவே இருக்கும் குறிப்பாக மேற்கத்திய நாடுகளில் ஒட்டுமொத்தமாகவே இது தடுப்பு நடவடிக்கையாகவே பார்க்கப்படுகிறது. வரலாற்றில் நிகழ்ந்த அனைத்துப் புரட்சிகளிலும் மிகத் தீவிரமான ஒரு புரட்சியின் அபாயத்தை எதிர்கொள்ள முதலாளித்துவம் தன்னையே மறுநிர்மாணம் செய்து கொள்கிறது. அதுதான் உண்மையிலேயே முதல் முதலான உலக ரீதியான- வரலாற்று ரீதியான புரட்சி ஆகும்."

## தோழர் மு.கார்த்திகேசன் அவர்களின் நூறாவது பிறந்ததினத்தையொட்டி:

இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) வட பிரதேசக்குழு, இலங்கையில் தேசிய இனப்பிரச்சினை கூர்மையடைந்தபொழுது அக்கட்சியின் தலைவர்களில் ஒருவரான தோழர் மு.கார்த்திகேசன் தலைமையில் 1975 மே 19 இல் கூடியபொழுது நிறைவேற்றிய சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததும் தீர்க்கதரிசனம் மிக்கதுமான தீர்மானத்தை கீழே தந்திருக்கிறோம்.

– ஆசிரிய குழு

# தேசிய ஒடுக்குமுறைக்கும் பிரிவினைக்கும் எதிராக தமிழ் மக்களே ஐக்கியப்படுவீர்!

குடியரசு தினத்தைப் பகிஸ்கரிப்பது என்பதை தமிழர் கூட்டணி வருடாவருடம் ஒரு சடங்காக நடாத்தி வருகின்றது. இது தமிழ் மக்களின் நலன்களுக்கு உகந்ததுதானா என்பதை தமிழ் மக்கள் தீர்க்கமாகச் சிந்திக்க வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது.

தமிழ் மக்களினதும் சிங்கள மக்களினதும் பொது எதிரி ஏகாதிபத்தியமாகும். அது உலக மக்களினதும் பொது எதிரியாகும். இந்த உண்மையை முன்பு தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி என்பனவும், தற்பொழுது தமிழர் கூட்டணியும் அங்கீகரிக்க மறுத்தது மட்டுமல்லாமல், ஏகாதிபத்தியமே தமிழ் மக்களின் நலன்களுக்கு உதவவல்லது என்ற தவறான கொள்கையையே நீண்டகாலமாகப் பின்பற்றி வந்தனர். அதன் விளைவே தமிழ் மக்களை உரிமையற்றவர்களாக வாழ வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளியது. அதுமட்டுமல்லாமல், இலங்கை மக்கள் ஏகாதிபத்தியத்திற்கெதிராக – தேசிய சுதந்திரத்தை வென்றெடுக்கும் பாதையில் எடுத்த சகல நடவடிக்கைகளையும் (குடியரசு பிரகடனம் உட்பட) தமிழ்த் தலைவர்கள் எதிர்த்து வந்ததின் மூலம் இலங்கை மக்களின் பெரும்பான்மையானோரின் எதிர்ப்பைச் சம்பாதித்ததுமல்லாமல், தமிழ் மக்கள் தேசிய சுதந்திரத்திற்கும் தேசிய அபிலாசைகளுக்கும் எதிரானவர்கள் என்ற தவறான எண்ணத்தை தென்னிலங்கை மக்கள் மத்தியில் வளர்த்தும் விட்டது. இதனால் இலங்கையில் பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்படும் மக்களாக தமிழ் மக்கள் ஆக்கப்பட்டுள்ளார்கள்.

மறுபுறத்தில் தமிழ் காங்கிரஸ், தமிழரசுக் கட்சி, தமிழர் கூட்டணி என்பன தொடர்ச்சியாகப் பின்பற்றி வந்த தேசவிரோதக் கொள்கையைச் சாட்டா



வைத்துக் கொண்டு, அரசியல் சுயலாபம் தேடும் பூர்சுவாக் கட்சிகள் சிங்கள மக்கள் மத்தியில் மட்டும் தங்கியிருந்து பாராளுமன்ற ஆசனங்களை பெரும்பான்மையாக வென்றெடுக்கும் குறுகிய தேசியவாத, சந்தர்ப்பவாதக் கொள்கைகளைப் பின்பற்றி வருவதால், தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்படுவது தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, தேசிய நலன்களுக்கும் மிகவும் அவசியமானது என்பதை உணர மறுப்பதன் மூலம், ஏகாதிபத்தியவாதிகள் இப்பிரச்சினையில் தலையிட்டு சைப்பிரசில் நடப்பது போல் அல்லது பாகிஸ்தானில் நடந்தது போல ஒரு நிலையை உருவாக்க வாய்ப்பைத் தேடிக் கொடுத்துள்ளார்கள்.

இந்த நிலையை ஏற்கெனவே உணர்ந்ததினால் போலும், இலங்கையின் பிரபல தேசியவாதியான முன்னாள் பிரதமர் காலஞ்சென்ற திரு. எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்க, தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான அணுகுமுறையையும் கொள்கையையும் 'பண்டா – செல்வா ஒப்பந்தத்தின்' மூலம் முன்வைத்தார். இந்த நல்ல வாய்ப்பை ஏகாதிபத்திய சார்பு யூ.என்.பியும் இதர வகுப்புவாத சக்திகளும் வடக்கிலும், தெற்கிலும் நடாத்திய எதிர்ப்பு இயக்கத்தின் மூலம் சிதறடித்து விட்டார்கள். இது இந்த நாட்டின் துர்ப்பாக்கியமாகும்.

இன்று பண்டாரநாயக்கவின் கொள்கையைப் பின்பற்றுவதாகக் கூறும் திருமதி சிறீமாவோ பண்டாரநாயக்கவின் அரசாங்கம், தமிழ் மக்களின் பிரச்சினை அடிப்படையில் ஒரு தேசியப் பிரச்சினை என்பதை ஏற்றுக் கொண்டு செயல்பட்ட அமரர் பண்டாரநாயக்கவின் கொள்கைகளையும், கோட்பாடுகளையும் செயல்படுத்தத் தயங்குவதன் மூலம் தமிழ் மக்களை ஏகாதிபத்திய, பிற்போக்கு முகாமில் தள்ளி விட்டுள்ளது. இதனால் நாட்டுக்கும், தேசிய சுதந்திரத்திற்கும், தேசிய ஒருமைப்பாட்டுக்கும் குந்தகம் ஏற்படுத்த ஏகாதிபத்தியவாதிகளுக்கு பெரும் வாய்ப்பை ஏற்படுத்திவிட்டார்கள். இதையிட்டு நாட்டு நலனில் அக்கறையுள்ள சகலரும் சிந்திக்க வேண்டும். இந்த அபாயம் சிறிய விசயமல்ல.

எம்மைப் பொறுத்தளவில் தமிழ் மக்களின் மொழி, இனப் பாதுகாப்புக்கான சரத்துகள் அரசியல் சட்டத்தில் சேர்க்கப்படாததை நாம் எதிர்க்கின்றோம். அதேபோல, பதிவுப் பிரசைகளுக்கும் இலங்கைப் பிரசைகளுக்கும் இடையில் பாகுபாடு காட்டப்படுவதை முற்றாக அகற்ற வேண்டும் என வற்புறுத்துகின்றோம். கல்வி, வேலைவாய்ப்பு என்பவற்றில் இன ரீதியான பாகுபாட்டை நாம் எதிர்க்கின்றோம். பொருளாதார ரீதியாக சிங்களப் பிரதேசத்திற்கும், தமிழ் பிரதேசத்திற்கும் இடையில் பாரபட்சம் காட்டப்படுவதை நாம் எதிர்க்கின்றோம். தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் குறைந்த பட்சம் பண்டாரநாயக்கவினது கொள்கையையாவது அரசு

நடைமுறைப்படுத்த வேண்டும்.

இன்று தமிழ் மக்கள் இருதலைக் கொள்ளி எறும்பு போல் தத்தளிக்கிறார்கள். தமிழ் தலைவர்களின் ஏகாதிபத்திய சார்புக் கொள்கை அவர்களை ஒருபுறத்தால் நாசம் செய்கிறது. மறுபுறத்தால் தமிழ் மக்களின் பிரச்சினையை தீர்க்காமல் இருப்பதின் மூலம் சுயநல அரசியல் லாபம் தேடும் சந்தர்ப்பவாத, குறுகிய தேசிய அபிலாசைகளைப் பிரதிபலிப்பதில் ஒன்றுடன் ஒன்று போட்டியிடுவதும், ஐக்கியப்படுவதுமான அரசாங்கத்தினதும், ஐக்கிய தேசியக் கட்சியினதும் தந்திரோபாயங்களினால் தேசிய வாழ்விலிருந்து தமிழ் மக்கள் ஒதுக்கப்படுகிறார்கள். ஆகவே இந்த இரண்டு தவறான போக்குகளுக்கும் எதிராக தமிழ் மக்கள் ஐக்கியப்பட வேண்டும், போராட வேண்டும். இதைத் தவிர தமிழ் மக்கள் முன் வேறு மார்க்கமே கிடையாது. தமிழ் மக்கள் மத்தியில் உள்ள ஜனநாயக சக்திகள், தொழிலாளர்கள், விவசாயிகள், இளைஞர்கள், புத்திஜீவிகள், தொழிற்சங்கங்கள், மற்றும் தேசாபிமானிகள் அனைவரும் ஒன்றுபட்டு, தமிழர் விரோதப் போக்குக்கு எதிராக ஐக்கியப்பட்டு, தமிழ் மக்களின் ஜனநாயக அணி ஒன்றைத் தோற்றுவிப்பதே தமிழ் மக்கள் பிரச்சினையின் தீர்வுக்கான முதற் தேவையாகும். ஒரு சிலரின் தனிப்பட்ட அரசியல் லாபத்திற்காக குடியரசு தினத்தைப் பகிஸ்கரிப்பதன் மூலம் தமிழ் மக்கள் எந்த நன்மையையும் அடைய முடியாது. மாறாக, இளைஞர்களினதும், மாணவர்களினதும் எதிர்காலத்தைத்தான் பாழடிக்க முடியும்.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளையோ, வேறெந்த ஏகாதிபத்திய நாட்டையோ அல்லது வேறு அந்நிய நாடு எதனையுமோ நம்பி தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட முடியாது. தமிழ் மக்களின் பிரச்சினைக்கு இலங்கை மக்களே தீர்வுகாண வேண்டும். கம்போடியாவிலும், வியட்நாமிலும் மக்கள் ஈட்டிய மகத்தான வெற்றி நமக்கு நல்ல பாடமாக அமைய வேண்டும். ஏகாதிபத்தியத்தின் காலைப் பிடித்தோரையே ஏகாதிபத்தியம் உதறித்தள்ள வேண்டிய காலகட்டம் வந்துவிட்டது. ஏகாதிபத்தியத்தைச் சார்ந்தல்ல, எதிர்த்தே மக்கள் விடுதலை பெற முடியும். தமிழ் மக்கள் இந்த நாட்டில் சமத்துவ, ஜனநாயக உரிமையுள்ளவர்களாக வாழ முடியும். பெரும் முதலாளிகளாலும், வர்த்தகர்களாலும், நிலச் சொந்தக்காரர்களாலும் தலைமை தாங்கப்படும் தமிழர் கூட்டணியால் தமிழ் மக்களுக்கு எந்த நல்வழியையும் காட்ட முடியவில்லை. இனிமேலும் காட்ட முடியாது. ஆகவே இந்த நேரத்திலாவது தமிழ் மக்கள் தீவிரமாகச் சிந்தித்து செயல்பட வேண்டும் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்) வட பிரதேசக் கமிட்டி வேண்டுகோள் விடுக்கிறது.

எமது தேசத்தின் ஒருமைப்பாடு, நமது மக்களின் ஐக்கியம், நமது பல்வேறு தேசிய இனங்களின் ஐக்கியம், இவையே நமது இலட்சியத்தின் நிச்சய வெற்றிக்கான அடிப்படை உத்தரவாதங்கள் ஆகும்.

***இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட் - லெனினிஸ்ட்)***

***வட பிரதேசக் கமிட்டி***

*19.05.1975*

---

**பிற்குறிப்பு:**

இலங்கை மார்ச்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியின் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 44 வருடங்கள் உருண்டோடிவிட்டன. இந்த அறிக்கையின் தலைப்பின் அர்த்தப்படிதான் நாட்டின் நிலைமை இன்றுவரை இருந்து வருகிறது. அதாவது தமிழ் பேசும் மக்கள் மீதான சிங்களப் பேரினவாத ஒடுக்குமுறை இன்னமும் தொடர்ந்தபடியே உள்ளது. அதேநேரத்தில் தமிழ் பேசும் மக்களின் தற்கொலைக்கு ஒப்பான தனிநாட்டுக்கான கருத்தும் வலுவுடனேயே இருந்து வருகிறது.

இந்த இரண்டு தவறான போக்குகளின் விளைவாக 30 ஆண்டுகாலப் போர் நடைபெற்றது. அதன் விளைவாக எண்ணற்ற மனித உயிர்களும் சொத்துகளும் அழிக்கப்பட்டன. 10 ஆண்டுகளுக்கு முன் போர் ஒருவாறு முடிவுக்குக் கொண்டுவரப்பட்ட போதும், இனப்பிரச்சினைக்கு எந்தவொரு தீர்வும் இன்னமும் காணப்படவில்லை. தீர்வுகாணப்படக்கூடிய எந்தவொரு நம்பிக்கைக் கீற்றும் கூடத் தென்படவில்லை. அதற்குக் காரணம், தமிழ் பேசும் மக்கள் மீது தேசிய ஒடுக்குமுறையைத் திணித்தவர்களும், அதற்கு எதிர்வினையாக பிரிவினை கோரியவர்களும் தத்தமது நிலைப்பாட்டில் இருந்து இன்றுவரை மாறவில்லை என்பது ஒருபுறமிருக்க, தமது அரசியல் இருப்புக்காகவும் சுயநலத்துக்காகவும் சந்தர்ப்பவாதரீதியில் தேசிய இனப்பிரச்சினையை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தியும் வருகின்றனர். அதனால் இருதரப்பும் வாய்ச்சவடால்கள் அடித்தாலும் உண்மையில் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு ஒன்று ஏற்படுவதை விரும்பவில்லை.

இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள சில விடயங்கள் தீர்க்கதரிசன மிக்கவையாகவும், இன்றைக்கும் பொருத்தமாகவும் இருப்பதனையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும்.

அதாவது, தமிழ் தலைமைகள் அன்று மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சி சுட்டிக்காட்டியதைப் போன்றே இன்றும் கூட ஏகாதிபத்திய சார்பானவர்களாகவே இருந்து வருகின்றனர். இதனால் தமிழ் மக்கள் இலங்கையின் தேசிய சுதந்திரம், சுயாதிபத்தியம், பிரதேச ஒருமைப்பாடு என்பனவற்றுக்கு எதிரானவர்கள் என்ற கருத்து நாட்டின் பெரும்பான்மை மக்களான சிங்கள மக்கள் மத்தியில் மேலும் மேலும் வலுப்பெற்று வருகின்றது.

அடுத்த விடயம், தமிழ் தலைமைகளின் இந்த தேசவிரோதப் போக்கைப் பயன்படுத்தி தென்னிலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் இனவாதத்தை ஒரு ஆயுதமாகப் பயன்படுத்தி நாடாளுமன்ற அதிகாரத்தைக் கைப்பற்றப் போட்டியிடுகின்ற நிலைமையாகும். அதுவும் அறிக்கையில் சுட்டிக்காட்டியதைப் போல இன்றும் தொடர்கின்றது.

அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள இன்னொரு முக்கியமான விடயம், இலங்கையின் இனப்பிரச்சினை அமைதி வழியிலும் அரசியல் ரீதியாகவும் தீர்க்கப்படாவிட்டால், இலங்கையில் அந்நியத் தலையீடு ஏற்படும் என்பதாகும். அந்தத் தீர்க்கதரிசனமான கருத்து நூற்றுக்கு நூறு சரியென்பதை இலங்கை இனப்பிரச்சினையில்

இந்தியாவும் மேற்குலக சக்திகளும் செய்துவரும் தொடர்ச்சியான தலையீடுகள் நிரூபித்து நிற்கின்றன.

இந்த அறிக்கையில் இன்னுமொரு விடயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அதாவது, தமிழ் மக்கள் மேலுள்ள தேசிய ஒடுக்குமுறையை எதிர்க்கவும், தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வாக தமிழ் முதலாளித்துவத் தலைமைகள் முன்வைத்துள்ள தவறான தனிநாட்டுத் தீர்வை எதிர்த்துப் போராடவும் தமிழ் மக்களின் பரந்துபட்ட முன்னணி ஒன்றை அமைக்க வேண்டும் என்பதாகும். அந்தக் கருத்தின் அடிப்படையிலேயே 1975இல் மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் முன்னின்று 'தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணி' என்ற அமைப்பை உருவாக்கிது.

ஆனால் நாட்டில் ஏற்பட்ட பிரிவினைவாத ஆயுதப் போராட்டம் காரணமாக அந்த முன்னணியும் தடம்மாறி தனிநாட்டுக்கான தவறான ஆயுதப்போராட்டப்பாதையில் சென்று ஈற்றில் அழிந்துபோனது.

எது எப்படியிருந்தபோதிலும், இந்த அறிக்கையில் சுட்டிக்பகாட்டப்பட்டுள்ள நிலைமைகள் இன்றும் அப்படியே உள்ளன. அதேநேரத்தில் பாரம்பரியத் தமிழ் தலைமைகளும், இளைஞர்களால் வழிநடாத்தப்பட்ட தமிழ் ஆயுதப்போராட்ட இயக்கங்களும் தவறான பாதையில் சென்றதால் அவை அழிக்கப்பட்டு அல்லது வலுவிழந்து நிற்கின்றன. அதனால் தமிழ் மக்களின் மத்தியில் ஒரு அரசியல் சூன்ய சூழ்நிலையும் அதனால் அரசியல் தலைமைத்துவ வெற்றிடமும் தோன்றியுள்ளன. இந்த நிலைமையை நீடிக்கவிடாது சீர்செய்வது அவசியமானது.

அதைச் சீர்செய்வதற்கான ஒரே வழி தமிழ் மக்களின் தேசிய – ஜனநாயகப் போராட்டத்தை சரியான திசைமார்க்கத்தில் வழிநடத்தும் பொருட்டு சரியான அரசியல் தலைமையையும், அதன் தலைமையிலான பரந்துபட்ட ஐக்கிய முன்னணியொன்றை உருவாக்குவதும் ஆகும்.

அப்படிப் பார்க்கையில், தமிழ் மக்களின் பிரச்சினைக்கு சரியான அரசியல் தீர்வை 1954ஆம் ஆண்டிலேயே முன்வைத்த கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வழியிலான கொள்கைக்கு மீண்டும் புத்துயிரளித்த மார்க்சிச – லெனினிச கம்யூனிஸ்ட் கட்சியை திரும்பவும் புனருத்தாரணம் செய்வதும், அக்கட்சியினால் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட தமிழ் மக்கள் ஜனநாயக முன்னணியை மீளச் செயற்பட வைப்பதுமே இன்றைய காலத்தின் தேவையாகும்.

இதுவே தோழர் மு.கார்த்திகேசனின் நூறாவது பிறந்த தினத்தை நாம் கொண்டாடுகின்ற வேளையில் அவருக்கும் அவருடன் இணைந்து பணியாற்றிய சகல காலஞ்சென்ற தோழர்களுக்கும் செய்யும் உண்மையான அஞ்சலியும் கடமையுமாகும்.

# இலங்கை தேர்தல் ஆணைக்குழுவில் அமெரிக்காவின் அதீத தலையீடு

## கண்காணிப்பு அமைப்புகள் குற்றச்சாட்டு


**இ**லங்கையின் சுயாதீன தேர்தல் ஆணைக்குழுவின் விடயங்களில் அமெரிக்கா தலையிட்டு வருவதாகவும் இதனால் தேர்தல் நடவடிக்கைகளை சுயாதீனமாக மேற்கொள்ள பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளதாகவும் இலங்கையில் செயற்படும் சுயாதீன தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் எச்சரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுபற்றி சிங்கள ஊடகமொன்று அதன் முதற்பக்க முக்கிய செய்தியில் தெரிவித்துள்ள தகவலில்:

இலங்கையில் சுயாதீன தேர்தல் ஆணைக்குழு அமைக்கப்பட்ட பின்னர் அதன் சுயாதீன தேர்தல் செயற்பாடுகளில் அமெரிக்காவின் தலையீடுகள் அதிகரித்துள்ளதாகவும் இவ்வாறு இலங்கையின் சுயாதீன தேர்தல் விடயங்களில் தலையிடும் நடவடிக்கையை அமெரிக்க தேர்தல் முறைமைகளுக்கான சர்வதேச அமைப்பு (International Foundation of Electoral System) எனப்படும் சர்வதேச நிறுவனம் மூலமாக மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சர்வதேச தேர்தல் முறைமைகள் அமைப்பின் அமெரிக்காவைச் சேர்ந்த பெண் பணிப்பாளர் அண்மையில் இலங்கைக்கு வந்திருந்ததாகவும் அவர் கொழும்பிலுள்ள அமெரிக்க தூதரகத்தின் இரண்டாவது உயர் உத்தியோகத்தருடன் இலங்கையின் தேர்தல் முறைமைகள் மற்றும் அதில் அமெரிக்கத் தரப்பில் தலையிடக்கூடிய சாத்தியங்கள் பற்றி பேச்சுவார்த்தை நடத்தியுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களிலிருந்து தகவல் வெளியாகியுள்ளதாக குறித்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை சுயாதீன ஆணைக்குழுவின் சில சிரேஸ்ட உத்தியோகத்தர்கள் அமெரிக்கத் தரப்புடன் தொடர்புகளைக் கொண்டுள்ளதாகவும் அவ்வாறான உத்தியோகத்தர்களுக்கு பல்வேறு உதவிகள், வசதிகள் மற்றும் வெளிநாட்டு பயண வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் இலங்கையின் சுயாதீன தேர்தல் விடயங்களில் தலையிடும் நடவடிக்கைகளை அமெரிக்கத் தரப்பு சூட்சுமமாக மேற்கொண்டு வருவதாக தேசிய தேர்தல் கண்காணிப்பு அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளதாக மேலும் குறித்த தகவல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இலங்கையில் சுயாதீன தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் திட்டத்துக்காக அமெரிகா வழங்கும்




நிதியை நிர்வகிக்கும் பொறுப்பும் குறித்த சர்வதேச தேர்தல் முறைமைகள் அமைப்புக்கு இருப்பதால் சுயாதீன தேர்தல் மற்றும் கண்காணிப்பு வேலைத்திட்டங்களை அமெரிக்காவின் தேவைகளுக்கு ஏற்ப மேற்கொள்ளும் அல்லது முடக்கும் நடவடிக்கைகளையும் குறித்த சர்வதேச அமைப்பு மேற்கொண்டு வருவதாகவும் சம்பந்தப்பட்ட வட்டாரங்களில் வெளியாகியுள்ளதாக குறித்த சிங்கள ஊடகச்செய்தி தெரிவித்துள்ளது.

**நன்றி: தினக்குரல் (யூலை 02-2019)**

---

பொருள், இயற்கை, வாழ்நிலை என்பவைதான் புறநிலை உண்மை, நமது உணர்வுக்கு அப்பால் – நமது உணர்வைச் சார்ந்திராமல், ஆதாரமாகக் கொண்டிராமல், சுயேட்சையாக - இயங்குபவை அவை. பொருள்தான் முதல். ஏனெனில், அதுதான் புலன் உணர்ச்சிகளுக்கும் கருத்துக்களுக்கும் உணர்வுக்கும் மூலாதாரம் தோற்றுவாய். உணர்வு என்பது இரண்டாம் பட்சமானது மூலத்திலிருந்து பெறப்படுவது.

**–ஸ்டாலின்**

# முஸ்லீம் அமைச்சர்களின் பதவி துறப்பு நாடகம் முடிவுக்கு வருகின்றது!

கடந்த ஏப்ரல் மாதம் உயிர்த்த ஞாயிறு தினத்தன்று தலைநகர் கொழும்பிலும் நாட்டின் சில பகுதிகளிலும் உள்ள தேவாலயங்களில் மதவழிபாட்டில் ஈடுபட்டிருந்த மக்கள் மீதும் மற்றும் நட்சத்திர விடுதிகள் மீதும் நடத்தப்பட்ட இஸ்லாமிய பயங்கரவாதிகளின் குண்டுத் தாக்குதல்களால் 250 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டதுடன் பல நூற்றுக்கணக்கானோர் காயமும் அடைந்தனர்.

இந்தத் தாக்குதல்கள் காரணமாக இலங்கை ஒரு பாதுகாப்பற்ற நாடு என்ற உணர்வு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உருவானது. இதன் காரணமாக நாட்டின் பொருளாதாரம் கடுமையாகப் பாதிக்கப்பட்டதுடன், அரசியல் ரீதியிலான நெருக்கடிகளும் ஏற்பட்டன.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி சில நாடுகள், குறிப்பாக அமெரிக்கா மற்றும் இந்தியா போன்றன இலங்கையின் உள்விவகாரங்களில் தலையீடு செய்ய எத்தனித்தன. ஆனால் தேசப்பற்றுள்ள அரசியல் சக்திகளும் மக்களும் அதற்கு அனுமதிக்கவில்லை. என்றாலும் திரைமறைவு முயற்சிகள் தொடர்ந்தவண்ணம் உள்ளன.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களைத் தொடர்ந்து அரசாங்கத்தில் உயர் பதவி வகித்து வந்த சில முஸ்லீம் அரசியல்வாதிகள் மீது குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. குறிப்பாக, அமைச்சர் ரிசாத் பதியுதீன், கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லா மற்றும் மேல்மாகாண ஆளுநர் ஆசாத் சாலி ஆகியோர் மீது இந்தப் பயங்கரவாதத் தாக்குதல்களுடன் சம்பந்தப்படுத்தி குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

விசேடமாக அமைச்சர் ரிசாத் பதியுதீன் மீது பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. ரிசாத் பதியுதீனை அமைச்சர் பதவியில் இருந்து நீக்குவதுடன், அவரைக் கைது செய்து விசாரணைக்கு உள்படுத்த வேண்டுமெனவும் நாட்டின் பல தரப்புகளிலிருந்தும் கோரிக்கைகள் எழுந்தன. அவர் மீது உடன் நடவடிக்கை எடுக்கக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர் அத்தரலிய ரத்தினதேரர் கண்டி தலதா மாளிகைக்கு முன்னால் சாகும்வரை உண்ணாவிரதத்திலும் ஈடுபட்டார்.

இந்த நிலைமைகள் ஆளும் ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடுமையான நெருக்கடியை உண்டுபண்ணின. ஏற்கெனவே இந்தத் தாக்குதல் பற்றி



இந்தியா வழங்கிய புலனாய்வுத் தகவல்களை மறைத்ததாகவும், அரசுக்கும் அதன் சர்வதேச எஜமானர்களுக்கும் இந்தத் தாக்குதல்களுடன் தொடர்புண்டென்றும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த சூழலில் அரசாங்கம் செய்வதறியாது நிலைகுலையத் தொடங்கியது.

**புனிதன்**

போதாதிற்கு ரிசாத் பதியுதீன் மீது எதிரணி நம்பிக்கை இல்லாத் தீர்மானம் ஒன்றையும் நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. அந்தத் தீர்மானத்தை ஆளும் ஐ.தே.கவின் சில நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஆதரித்து வாக்களித்து தீர்மானத்தை வெற்றிபெற வைக்கக்கூடிய சூழலும் உருவானது.

இந்தச் சூழ்நிலையில்தான் அரசாங்கத்தில் பதவி வகித்த முஸ்லீம் அமைச்சர்கள், பிரதி அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் அனைவரும் தமது பதவிகளைத் துறப்பது என முடிவு எடுத்தனர். ஆனால் பதவி துறந்தாலும் அரசுக்கு ஆதரவாகவே இருப்பது எனவும் முடிவும் செய்தனர். இதன் மூலம் இந்தப் பதவி துறப்பு ஐ.தே.கவால் அரங்கேற்றப்படும் ஒரு நாடகம் என உடனடியாகவே மக்கள் புரிந்துகொண்டனர். அதேநேரத்தில் ஜனாதிபதியின் வேண்டுகோளுக்கு அமைய கிழக்கு மாகாண ஆளுநர் ஹிஸ்புல்லாவும், மேல்மாகாண ஆளுநர் ஆசாத் சாலியும் தமது பதவிகளை ராஜினாமா செய்துகொண்டனர்.

முதலாவதாக, முஸ்லீம் அமைச்சர்கள் அனைவரும் கூண்டோடு பதவி விலகுவது என எடுத்த முடிவே மிகத்தவறானதாகும். ஏனெனில், உயிர்த்த ஞாயிறு தின குண்டுத்தாக்குதல்களுடன் தொடர்புள்ளவர்கள் என குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் அமைச்சர் ரிசாத் பதியுதீன், ஆளுநர்கள் ஹிஸ்புல்லா, ஆசாத் சாலி ஆகியோராவர். அப்படியிருக்க குற்றச்சாட்டுக்கு உள்ளாகாத மற்றைய அமைச்சர்களும் பதவி விலகக் காரணம் என்ன? அவர்கள் தம்மையும் குற்றச்சாட்டுகளுடன் இணைத்துக் கொண்டார்களா என்ற

கேள்வி இங்கே எழுகின்றது.

இந்தப் பதவி விலகல் மூலம் சில விடயங்கள் அம்பலத்துக்கு வந்துள்ளன. அதாவது, ஒருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டால் அவர் தார்மீக ரீதியில் தாமாகவே பதவி விலகிக்கொண்டு விசாரணைகளுக்கு ஒத்துழைப்பதுதான் ஜனநாயக ரீதியிலான பண்பாகும். அதற்குப் பதிலாக தன்னைக் குற்றச்சாட்டுகளில் இருந்து பாதுகாத்துக் கொள்வதற்காக இன அடிப்படையில் தனது இனத்தவர்கள் அனைவரையும் சேர்த்துக்கொண்டு அடாவடித்தனமாக சவால் விடுவது சர்வாதிகாரத்தனமானதும், நீதி நியாயத்துக்கு அப்பாற்பட்டதுமாகும்.

அதிலும் இலங்கையிலுள்ள முஸ்லீம் அரசியல்வாதிகளும் மதத் தலைவர்கள் சிலரும் சில அரபு நாடுகளின் பண உதவியுடனும் தார்மீக ஆதரவுடனும் இலங்கை முஸ்லீம்களை அரேபியமயப்படுத்த முயற்சி எடுத்து வருகிறார்கள் என்ற அச்சம் நாட்டு மக்களிடையே, குறிப்பாக பெரும்பான்மை சிங்கள மக்களிடையே ஏற்பட்டுள்ள நிலையில் இந்த ஒட்டுமொத்த பதவி விலகல் மேலும் மக்கள் மத்தியில் சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.

முஸ்லீம் அமைச்சர்கள் ஒட்டுமொத்தமாக பதவி விலகியமை நிச்சயமாக இனவாத அடிப்படையிலான நடவடிக்கையாகும். இந்த நடவடிக்கையில் ஐ.தே.கவுக்கும் நெருக்கமான சம்பந்தமுண்டு. தனது ஆட்சியைப் பாதுகாப்பதற்காக ஐ.தே.க. இந்த வழிமுறையை கையாண்டுள்ளது. அதில் உண்மை உள்ளது என்பது இப்பொழுது நிரூபணமாகியுள்ளது.

அதற்கு உதாரணம், குற்றச்சாட்டுக்கு உள்ளான அமைச்சர் ரிசாத் பதியுதீன் உட்பட எந்தவொரு முஸ்லீம் அரசியல்வாதி மீதும் இதுவரை விசாரணை நடத்தப்படவோ நடவடிக்கை எடுக்கப்படவோ இல்லை. அதுமாத்திரமின்றி, ரிசாத் பதியுதீன் குற்றமற்றவர் என்றும் ஐ.தே.க. அரசு அறிவித்திருக்கிறது. அத்துடன், பதவி விலகிய முஸ்லீம் அமைச்சர்கள் சிலர் மீண்டும் அமைச்சுப் பதவியை திரும்பவும் பெற்றிருப்பதுடன், ரிசாத் பதியுதீன் உட்பட ஏனையவர்களும் அமைச்சுப் பதவிகளை மீண்டும் பெறுவதற்குத் தயாராகியும் வருகின்றனர்.

ஒட்டுமொத்தத்தில் முஸ்லீம் அமைச்சர்களின் இந்த ராஜினாமா நடவடிக்கை தம்மையும் ஐ.தே.க. அரசையும் பாதுகாக்க ஆடிய நாடகம் என்பது இப்பொழுது தெட்டத்தெளிவாக நிரூபணமாகியுள்ளது. இதன் மூலம் முஸ்லீம் தலைமைகளும், ஐ.தே.க. தலைமையும் இனங்களுக்கிடையிலான முரண்பாடுகளை மேலும் கூர்மைப்படுத்தியுள்ளார்கள் என்பதுதான் உண்மை.

# போதைப்பொருளுக்கு எதிரான ஜனாதிபதியின் நடவடிக்கையை பலவீனப்படுத்துவதற்காகவே ஈஸ்டர் தின தாக்குதல்கள் நடத்தப்பட்டன!

*-சுதந்திரக் கட்சி செயலாளர்*

குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு மரணதண்டனைக்கு உள்ளாவதற்கு காத்திருக்கும் போதைப்பொருள் குற்றவாளிகள் சிலர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைக் கொலை செய்வதற்குத் திட்டமிட்டிருந்தனர் என்றும், அதுபற்றி பொலிஸ் புலனாய்வுப்பிரிவு விசாரணை நடத்தி வருவதாகவும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்திருக்கிறார்.

வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இதைத் தெரிவித்த ஜெயசேகர மேலும் கூறுகையில்,

ஈஸ்டர் தினத்தன்று நடத்தப்பட்ட தாக்குதல்கள், நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்கப்பட்டமை, உச்ச நீதிமன்றத்தில் தனிப்பட்டவர்களாலும், அரச சார்பற்ற அமைப்புகளாலும் தாக்கல் செய்யப்பட்டுள்ள டசின் கணக்கான அடிப்படை உரிமை மனுக்கள் என்பவை சதித்திட்டமொன்றின் சில பகுதிகளாகும்.

ஜனாதிபதி போதைப்பொருள், புகைத்தல் மற்றும் மதுபானம் என்பனவற்றுக்கு எதிராக நடத்துகின்ற போராட்டத்தை சில செல்வாக்குமிக்க மற்றும் சக்திவாய்ந்த நபர்கள் விரும்பவில்லை. ஜனாதிபதியின் நேரடி வழிநடத்தலின் கீழ் நாடு முழுவதும் நடாத்தப்பட்ட சோதனைகளின் போது சட்டத்தை மீறிய நூற்றுக்கணக்கானவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பல தொன்கள் நிறையுள்ள போதைப்பொருட்களும் கைப்பற்றப்பட்டுள்ளன. ஜனாதிபதி எடுத்துவரும் இத்தகைய நடவடிக்கைகளை பலவீனப்படுத்தும் நோக்கத்தை இலக்கு வைத்தே ஈஸ்டர் தின குண்டுவெடிப்புகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. அத்துடன் நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் பிரதான நோக்கம் ஜனாதிபதியின் மீது குற்றச்சாட்டுகளைச் சுமத்துவதே.

போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு மரண தண்டனை விதிப்பது சம்பந்தமான தீர்மானம் உயர்நீதிமன்றத்தினால் எடுக்கப்பட்டு பின்னர் அது மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் உறுதிப்படுத்தப்பட்டு இறுதியாக உச்சநீதிமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒன்றாகும். அதை இப்பொழுது உச்சநீதிமன்றம் ஒக்ரோபர் 30 வரை நிறைவேற்றுவதற்குத் தடை விதித்திருப்பது தனது முடிவையே தான் மீறும் செயலாகும்.

இவ்வாறு தயாசிறி ஜெயசேகர தனது ஊடகவியலாளர் சந்திப்பின்போது தெரிவித்திருக்கிறார்.

# 1983 கறுப்பு யூலை இனவாத வன்செயலால் உயிர்நீத்த அனைவருக்கும் அஞ்சலி!

*இலங்கையின் முதலாவது இலக்க ஏகாதிபத்தியதாசர் ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தால் திட்டமிட்ட முறையில் 1983 யூலை மாதத்தில் தமிழ் மக்கள் மேல் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவாத சங்காரத்தில் உயிர்நீத்த அனைத்து மக்களுக்கும் இந்த 36ஆவது வருட நினைவு தினத்தில் எமது நினைவஞ்சலியைச் செலுத்துகின்றோம்.*

***-'வானவில்' ஆசிரியர் குழு***

# தமிழரசுக் கட்சி தனது பாரம்பரிய விளையாட்டை ஆரம்பித்துள்ளது!

தமிழரசுக் கட்சியின் மாநாடு அண்மையில் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றுள்ளது. தமிழரசுக் கட்சியின் மாநாடுகள் என்பது பாரதூரமான விடயங்கள் குறித்து விவாதங்களைச் செய்து முடிவுகளை எடுக்கும் மாநாடாக ஒருபோதும் நடந்ததில்லை. அது எப்பொழுதுமே ஒரு கதம்பக் கூட்டமாகத்தான் நடைபெறுவது வழமை. இம்முறையும் அவ்வாறுதான் நடந்துள்ளது.

கட்சியின் உத்தியோகத்தர் தெரிவும் ஜனநாயக முறைப்படி மாநாட்டுப் பிரதிநிதிகளால் தெரிவு செய்யப்படுவதில்லை. ஏற்கெனவே இருக்கும் தலைமை முடிவு செய்யும் நபர்களை மாநாடு சம்பிரதாயபூர்வமாக ஏற்றுக் கொள்ளும். அந்த வகையில் திரு. மாவை சேனாதிராசா மீண்டும் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

மாநாட்டின் இறுதியில் பேசிய மாவை சேனாதிராசா, அரசாங்கம் மூன்று மாதங்களுக்குள் ஆக்கபூர்வமாகச் செயல்படாவிட்டால் தமிழரசுக் கட்சி தமிழ் மக்களைத் திரட்டிப் போராடத்தயங்காது என அரசுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார். மாவையின் பேச்சு இந்த ஆண்டின் மிகச் சிறந்த நகைச்சுவையாக இருப்பதால் மக்களால் வாய்விட்டுச் சிரிக்கத்தான் முடிந்தது.

ஏனெனில், 2015 ஜனவரி 8ஆம் திகதி முதல் தமிழரசுக் கட்சி ஐ.தே.க. தலைமையிலான அரசாங்கத்தை நிபந்தனை ஏதுமின்றி ஆதரித்து வருகின்றது. நான்கரை ஆண்டுகளாக அரசை முழுமையாக ஆதரித்து அதன் மூலம் அரசிடமிருந்து பல சலுகைகளைப் பெற்று வந்த தமிழரசுக் கட்சி, இப்பொழுது அரசுக்கு மூன்றுமாத காலக்கெடு விதித்து நிபந்தனை போடுவதொன்றால் அது வேடிக்கையே தவிர வேறு ஒன்றுமல்ல.

தமிழரசுக் கட்சி இப்பொழுது திடீரென அரசுக்கு நிபந்தனை விதிப்பதும், போராட்ட முஸ்தீபு காட்டுவதும் 'சோழியன் குடுமி சும்மா ஆடாது' என்பது போல விடயத்தோடுதான்.

விரைவில் ஜனாதிபதி தேர்தல்,



மாகாணசபைத் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் என்பன நடைபெற இருக்கின்றன. தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலில் ஒருபோதும் போட்டியிடாது. ஏனெனில் அப்படிப் போட்டியிட்டால் அதன் மூலம் ஐ.தே.கவுக்கு விழவேண்டிய வாக்குகள் சிதறிப்போய்விடும் என அதற்குப் பயம். ஆனால், மாகாணசபை மற்றும் நாடாளுமன்றத் தேர்தல்களில் தமிழரசுக் கட்சி நிச்சயமாகப் போட்டியிடும். அப்பொழுது தனக்கு விழவேண்டிய வாக்குகளில் வீழ்ச்சி ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவே இப்பொழுது தமிழரசுக் கட்சித் தலைமை அரசுக்கு நிபந்தனையும் விதித்து போராட்ட அறைகூவலும் விடுத்துள்ளது.

பிரதீபன்

ஏனெனில், கட்சியின் கண்மூடித்தனமான அரச ஆதரவுப்போக்கால் மக்களிடம் அதன் ஆதரவு மோசமாகச் சரிந்துபோய் உள்ளது. கடந்த வருடம் நடைபெற்ற உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களில் அது தெளிவாக வெளிப்பட்டது. அதனால் பயந்துபோன தமிழரசுக் கட்சித் தலைமை அதை ஈடுகட்டுவதற்காக இப்பொழுது போராட்ட வேசம் கட்ட முனைந்துள்ளது. தமிழரசுக் கட்சி இவ்வாறு நடந்து கொள்வது இதுதான் முதல்தடவையல்ல.

1965 பொதுத்தேர்தலின் பின்னர் தமிழரசுக் கட்சியும், தமிழ் காங்கிரஸ் கட்சியும் டட்லி சேனநாயக்க தலைமையிலான ஐ.தே.க. அரசில் ஏனைய ஐந்து கட்சிகளுடன் சேர்ந்து இணைந்துகொண்டன.

அன்றைய ஐ.தே.க. அரசு மாவட்ட சபைகள் அமைத்து தமிழர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதாக தமக்கு வாக்குறுதி அளித்ததால்தான் தாம் அரசுடன் இணைந்து கொண்டதாக அப்பொழுது தமிழரசுக் கட்சி நியாயம் பேசியது. ஆனால் இப்போதைய ஐ.தே.க. இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பதாக கடந்த நான்கரை ஆண்டுகளாக ஏமாற்றியது போல, அப்போதைய ஐ.தே.க. அரசும் மாவட்ட சபைகளைக் கொண்டுவராமல் நான்கரை ஆண்டுகள் தமிழரசுக் கட்சியை ஏமாற்றியது.

அதனால் ஏமாந்து தமிழ் மக்களிடம் மொக்கையீனப்பட்ட தமிழரசுக் கட்சி, 1965 முதல் 1969 நடுப்பகுதி வரை அரசின் பங்காளியாக இருந்துவிட்டு, 1970 பொதுத்தேர்தல் நெருங்கும் சமயம் பார்த்து ஐ.தே.க. அரசிலிருந்து வெளியேறியது. வெளியேறும் பொழுது அதற்குச் சொன்ன காரணமும் வேடிக்கையானது.

திரிகோணமலை நகரைத் தாம் புனித நகராகப் பிரகடனம் செய்யும்படி டட்லி அரசிடம் கேட்டதாகவும், அரசு அதற்கு மறுத்ததால் தாம் அரசிலிருந்து வெளியேறியதாகவும் தமிழரசுக் கட்சி காரணம் சொன்னது. ஆனால் அந்தக் காரணம் போலியானது என்பதும், அடுத்த தேர்தலை மனதில் கொண்டு தமிழ் மக்களை மீண்டும் ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப் பெற்றுக் கொள்ளவே தமிழரசுக் கட்சி நாடகம் ஆடுகிறது என்றும் தமிழ் மக்கள் நன்கு விளங்கிக் கொண்டனர். தமிழ் மக்களின் அந்தத் தெளிவு 1970 பொதுத்தேர்தலில் மிகவும் துலாம்பரமாக வெளிப்பட்டது.

**தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க...**

# மனிதம் நிறைந்ததொரு மனிதரோடு நானும்.....
# தோழர் மு. கார்த்திகேசன் நினைவாக...

பச்சை மரத்தில் ஆணி அடித்ததுபோல இன்னமும் என் மனதின் ஆழத்தில் ஆழப் பதிந்திருக்கின்றது அந்த நினைவு...! சுமார் ஒரு அறுபது வருடங்கள் இருக்கும் என நினைக்கின்றேன். யாழ் மாநகரசமையின் 10ம் வட்டாரத்தில் (அன்று யாழ் மாநகரசபை பத்து வட்டாரங்களாகத்தான் இருந்தது) ஒற்றைக்கை துரைராசா என்னும் பணபலமும், (கூலிப்) படைபலமும் கொண்ட தமிழ் காங்கிரஸ் கட்சியின் வேட்பாளரை எதிர்த்து, கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் போட்டியாளராக எங்கள் கார்த்திகேசன் மாஸ்ரர் களத்தில் நின்றிருந்தார்.

கார்த்திகேசன் என்றால் யார் என்று எங்களுக்கு முகம் தெரியாது! ஆனாலும் அந்தத் தூறல் மழையையும் பொருட்படுத்தாது சிவப்புக் கொடிகளை கைகளில் பிடித்துக்கொண்டு 'போடு புள்ளடி நட்சத்திரத்திற்கு நேரே' என கத்திக்கொண்டு நானும் என்னுடைய வயதுடைய சில சிறிசுகளுமாக கிடங்கும் பள்ளமுமாக இருந்த அந்த மக்கிக்கிடங்கு வீதியில் வலம் வருகின்றோம்! சிறுவர்களான நாங்கள் மட்டுமல்ல எங்கள் அயலில் உள்ள இளைஞர்கள், பெரியவர்கள், முதியவர்கள் என அனைவரது மனங்களிலும் சிம்மாசனம் போட்டு அமர்ந்திருந்தவர் கார்த்திகேசன் மாஸ்ரர்தான்!

எனக்கு விபரம் தெரிந்த நாட்களில் மாஸ்ரரை சந்தித்தபோது வியந்து நின்றேன்! காரணம் இவர் ஏனைய கல்விமான்களைப்போல படித்தவர் என்னும் கர்வம் இம்மியளவும் இல்லாதவர்! (நான் அறிந்த பல படித்த மனிதர்கள் ஆங்கிலம் தெரியாதவர்களிடமும் கதைக்கும்போது ஆங்கிலச் சொற்களை இடையிடையே புகுத்தித்தான் பேசுவார்கள்) மிகவும் சாதுவான போக்குடையவர், மற்றவர்களுடன் உரையாடும்போதும், பிரச்சனைகளை அணுகும்போதும் நிதானமான போக்குடையவர். எந்த நேரமும் சிரித்த முகம். நண்பர்களாக இருந்தாலும் சரி உதவி கேட்டுவரும் புதியவர்களாக இருந்தாலும்சரி



*தோழர் கார்த்திகேசனும் அவரது மனைவி வாலாம்பிகையும்*

அவர்களை உபசரிப்பதில் அவரும் அவருடைய மனைவியாரும் பெரும் அக்கறை காட்டுவார்கள். இப்படியான ஒரு மனிதரை மிக அரிதாகவே காணமுடியும்!.

**வண்ணை தெய்வம்**

அவருடைய படிப்பிற்கும், சமூகத்தில் அவருக்கு இருந்த மதிப்பிற்கும் என் போன்றவர்களெல்லாம் ஒரு கொசுறுக்குச் சமம்! ஆனாலும் நான் அவருடைய இல்லத்திற்கு செல்கின்ற சமயங்களில் பல பெரிய மனிதரர்களுடன் உரையாடிக்கொண்டிருந்தாலும் நான் சென்றதற்கான காரணத்தை கேட்டறிவதில் அவர் காட்டுகின்ற அக்கறையும் அந்த பெருந்தனமையையும் பெரும் மகான்களிடம்தான் காணமுடியும்!.

ஒரு சமயம் கிளிநொச்சியில் வசிக்கும் எனது உறவுக்கார நண்பரொருவர் தான் கட்டிக்கொண்டிருந்த வீட்டை கட்டி முடிப்பதற்கு வங்கியில் கடன் பெறுவதற்கு சாட்சிக் கையெழுத்து போடுவதற்காக அரசாங்க உத்தியோகத்தர்தான் தேவையென வங்கி நிர்வாகம் கூற, அதற்காக எனது சகோதரனைத் தேடி வந்தார். அவர் வந்த நேரம் எனது சகோதரர் கொழும்பில் நின்ற காரணத்தால் என்ன செய்யலாம்? என என்னிடம் ஆலோசனை நேட்டார். நான் ஏதோ ஒரு நம்பிக்கையில் அவரை கார்த்திகேசன் மாஸ்ரரிடம் அழைத்துச் சென்றேன். நான் என்னுடைய ஒரு தேவைக்காக அப்படியானதொரு உதவியைக் கேட்டால் அதில் ஒரு நியாயம் இருக்கின்றது. ஆனால் அவருக்கு முன்பின் தெரியாத ஒருவருக்காக இருபத்தையாயிரம் ரூபா கடனுக்கு

(அன்றைய நாட்களில் இருபத்தையாயிரம் ரூபா என்பது இன்று இருபத்தைந்து இலட்சத்திற்குச் சமம்!) பிணை நிற்கும்படி கேட்பது எந்த வகையிலும் நியாயம் அற்றது! ஆனாலும் நான் கேட்டவுடன் எந்தவிதமானதொரு மறுப்பும் கூறமல் கையெழுத்துப்போட்ட உயர்ந்த குணத்தை எப்படி வார்த்தைகளுக்குள் அடக்குவது? அந்தச் சம்பவத்தை இன்றும் எனது அந்த நண்பன் ஆச்சரியத்தோடும், பெருமையோடும் சொல்விக் கொள்வான். 'கார்த்திகேசன் மாஸ்ரர் எல்லோரையும்போல சாதாரண மனிதர் அல்ல' என்று.

கலை ஆர்வத்தால் நாடகங்களில் நடித்துக்கொண்டிருந்த நான், நண்பனுக்காக ஒரு நாடகத்தை எழுதிக் கொடுத்தேன். அயலிற்குள் அந்த நாடகம் மேடையேறியது. இதை அறிந்திருந்த மாஸ்ரர் அவர்கள், பின்பொருமுறை என்னுடன் உரையாடும்போது 'நாம் எழுதுகின்ற நாடகங்கள் நாட்டுக்கு மக்களுக்கு ஒரு செய்தியைச் சொல்லவேண்டும்' என்றார். உதாரணமாக 'மனோஹரா' என்ற திரைப்படத்தில் ஒரு நாடகம் இடம்பெறும். அதில் அந்த திரைப்படத்தில் வருகின்ற மகாராணி செய்கின்ற கொடுமைகளை அம்பலப்படுத்துவதற்காக அவருடைய கதையையே பெயர்களில் மாற்றங்கள் செய்து நாட்டு மக்களுக்கு நடித்துக் காட்டுவார்கள்! இப்படியாக எங்கள் கலைப்படைப்புகள் மக்களை சிந்திக்க வைக்கவேண்டும் என பாறாங்கற்களாக இருந்த என் சிந்தனைகளை சிற்பங்களாக மாற உளியாக இருந்தவர்.

இலக்கிய ஆர்வத்தில் 'சாட்டை' என்னும் சஞ்சிகையை நான் ஆரம்பித்தபோதும் அதை நெறிப்படுத்தியவர். எனது இல்லத்திலேயே நடந்த வெளியீட்டு விழாவிற்கு இவர் தலைமை தாங்க, திரு.டானியல் அவர்கள் சிறப்புரையாற்றியது நான் எதிர்பாராமல் இவர்கள் எனக்குச் செய்த மரியாதை!.

கார்த்திகேசன் மாஸ்ரர் மரணித்துவிட்டார் என்ற செய்தியறிந்து, அன்றே அப்பொழுது அவர் வசித்துவந்த வட்டுக்கோட்டையில் உள்ள அவரது இல்லத்திற்கு சென்றேன். முற்றத்தில் ஐம்பதுக்கும் மேற்பட்ட நாற்காலிகள் போடப்பட்டிருந்தன. அன்று அஞ்சலி செய்ய வந்தவர்களில் முக்கியமானவர்கள் முன்னாள் மேயராக இருந்த 'மைனர்' நவரத்தினம், மாநகரசபை உறுப்பினராக இருந்த கொட்டடித் தெய்வேந்திரம், தோழர் கணேசவேல், இன்னும் பலர்....

நான் சந்தித்த... நேசித்த... நல்ல மனிதர்களில் எங்கள் கார்த்திகேசன் மாஸ்ரர் என்றென்றும் என் நெஞ்சத்தில் நிறைந்திருப்பவர்!

இவரைப்பற்றி எண்ணி நயப்பதற்கு... வியப்பதற்கு... இன்னும் எத்தனையோ இருக்கின்றது. ஆனாலும் இத்தோடு நிறுத்திக்கொள்கின்றேன்.

இலங்கையில் கம்யூனிசம் தோத்திருக்கலாம்! ஆனாலும் தோழர் மு.கார்த்திகேசன் என்ற இந்த மனிதம் நிறைந்த மனிதன் தோற்கவில்லை. இன்னும் ஆயிரம் ஆண்டுகளுக்கு வாழ்ந்து கொண்டே இருப்பார்.

# தோழர் மார்த்தா ஹர்னேக்கர் காலமானார்

**தோ**ழர் மார்த்தா ஹர்னேக்கர் (Marta Harnecker) கனடாவில் புற்றுநோயால் ஜூன் 15, 2019 அன்று காலமானார்.

ஓர் இடைவிடாத போராளி, தோழர் மார்த்தா ஹர்னேக்கர் (1937 - 2019) பரந்த லத்தீன் அமெரிக்க பார்வையில் சோசலிசத்திற்கான புரட்சி தொடர்பான கோட்பாட்டின் துறைகளில் மதிப்புமிக்க பங்களிப்புகளை வழங்கியுள்ளார்.

தோழர் மார்த்தா ஹர்னேக்கரின் போராட்டம் ஒரு மனிதாபிமான உலகத்திற்காக இருந்தது.

இருபத்தியொன்றாம் நூற்றாண்டு சோசலிசம் என்ற கருத்தாக்கத்தின் அடிப்படையில் தொடர்ந்து மார்க்சியத்தை முன்னெடுத்துச் செல்லும் நோக்குடன் எழுதியும் பேசியும் வந்தவர். சிலியில் பிறந்த இவர், அலெண்டே அமைச்சரவையில் இடம் பெற்றிருந்தவர். வெனிசுலாவில் சாவேசின் ஆலோசகராகப் பணியாற்றியவர். மார்க்சியம் தொடர்பான 80 க்கும் மேற்பட்ட நூல்களையும் ஏராளமான கட்டுரைகளையும் எழுதியுள்ளார். உலக இடதுசாரி இயக்கத்திற்கு இவருடைய மரணம் பேரிழப்பாகும்.

**10ம் பக்கத்தொடர்ச்சி...**

*1970* பொதுத்தேர்தலில் ஐ.தே.க. தெற்கில் படுதோல்வியடைந்தது. சிறீமாவோ பண்டாரநாயக்க தலைமையிலான மக்கள் ஐக்கிய முன்னணி மூன்றில் இரண்டு இடங்களில் வெற்றிபெற்று ஆட்சிபீடமேறியது.

வடக்கைப் பொறுத்தவரை ஐ.தே.க. அரசுடன் ஒட்டியிருந்த தமிழரசு – தமிழ் காங்கிரஸ் தலைமைகளுக்கு தமிழ்மக்கள் தக்க பாடம் புகட்டினர். அதன்படி, 'முடிசூடாமன்னன்' தமிழ் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஜீ.ஜீ.பொன்னம்பலம் யாழ்ப்பாணம் தொகுதியில் தோல்வியைத் தழுவினார். தமிழரசுக் கட்சியின் செயலாளர் நாயகம் 'தளபதி' அ.அமிர்தலிங்கம் தனது வட்டுக்கோட்டைத் தொகுதியில் தோல்வியுற்றார். தமிழ் காங்கிரஸ் கட்சியின் 'உடுப்பிட்டிச் சிங்கம்' கட்சியின் பொதுச்செயலாளர் மு.சிவசிதம்பரம் உடுப்பிட்டித் தொகுதியில் மண்கவ்வினார். தமிழரசுக் கட்சியின் 'இரும்பு மனிதன்' டாக்டர் ஈ.எம்.வி. நாகநாதன் தனது நல்லூர் தொகுதியைப் பறிகொடுத்தார். தமிழரசுக் கட்சியின் 'அடலேறு' மு.ஆலாலசுந்தரம் கிளிநொச்சித் தொகுதியில் தோல்வியால் துவண்டு விழுந்தார்.

இவ்வாறாக அன்றைய ஐ.தே.க. அரசாங்கத்தில் பங்காளிகளாக இருந்த தமிழரசு – தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் முக்கிய தலைகளையெல்லாம் அத்தேர்தலில் தமிழ்மக்கள் தோல்வியுற வைத்தனர். நான்கரை ஆண்டுகள் ஐ.தே.க. அரசுடன் ஒட்டியிருந்துவிட்டு, தேர்தலுக்காக நாடகமாடி அரசிலிருந்து வெளியேறிய அவர்களது நாடகத்தை தமிழ் மக்கள் நம்பவில்லை என்பதை அத்தேர்தலில் மக்கள் நிரூபித்துக் காட்டினர்.

இன்றும் ரணிலின் ஐ.தே.க. அரசுக்கு நான்கரை ஆண்டுகள் முண்டு கொடுத்துவிட்டு, தேர்தலை மனதில் வைத்து அரசுக்கு போலி எச்சரிக்கை கொடுத்து நாடகம் ஆடும் தமிழரசுக்கட்சித் தலைமைக்கு அடுத்து வரும் நாடாளுமன்ற மற்றும் மாகாணசபைத் தேர்தல்களில் தமிழ் மக்கள் தக்கபாடம் புகட்டுவர் என நம்பலாம்.

அதேபோல, நாட்டை சகல வழிகளிலும் நாசம் செய்துவரும் ஐ.தே.க. தலைமைக்கும் சிங்கள மக்கள் தக்க பாடம் புகட்டுவர் என்றும் நம்பலாம்.

***நன்றி இணையத்தளம்:*** chakkaram.com

# யாழ்ப்பாணத்தில் கார்த்திகேசன் நூற்றாண்டு நினைவு தின நிகழ்வு

முற்போக்காளர்களை இனங்கண்டு, அவர்களை நினைவு கூர்ந்து அறிமுகப்படுத்த வேண்டும் எனும் அவாவுடன் கி.பி. தோழர் என அனைவராலும் அறியப்பட்ட பசுபதி சீவரத்தினம் அவர்கள் தலைமையிலான ஏற்பாட்டுக் குழுவின் ஒழுங்கில் பொதுவுடமை இயக்கத்தின் முன்னோடி, கல்வியின் கலங்கரை விளக்கு கம்யூனிஸ்ட் மு.கார்த்திகேசன் அவர்களின் நூற்றாண்டு தின நிகழ்வு ஜூலை 16, 2019 தினம் சிறப்புற நடந்தேறியது. நிகழ்ச்சி நிரல் படங்களுடன் இணைக்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சி நிரலுடன் கார்த்திகேசனின் நீண்டகால கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் சுப்பையா அவர்களினது கட்டுரையும் இணைக்கப்பட்டு பங்கேற்றவர்களுக்கு வழங்கப்பட்டது. முக்கிய ஒழுங்குதாரராக சசிரேகா சுந்தரம் ஏற்பாட்டுக் குழுவின் பல பொறுப்புகளையும் ஏற்று நடாத்தினார்.

நிகழ்ச்சியில் மலையகம், கொழும்பு, திருகோணமலை, வவுனியா, பரந்தன், கிளிநொச்சியென நெடுதூரம் பயணித்து வந்த அபிமானிகளும், யாழ் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து வந்து பங்கு பற்றியோரும் என கணிசமான தொகையினருடன் நிகழ்ச்சி ரங்கன் தேவராஜன் (சட்டத்தரணி) தலைமையில், பல்வேறு தலைப்பில் கார்த்திகேசனையும், கார்த்திகேசனின் செயற்பாடுகளையும் நினைவு கூர்ந்து பேசப்பட்டது. பல தடவைகள் கார்த்திகேசன் போன்று ஆளுமையுள்ள ஆழமான அரசியல் அறிவுடன் மக்களின் தேவைகளை அறிந்து செயற்பட இனியொருவர் கிடைக்கமாட்டார் எனவும், அவரது கல்வி சார்ந்த அனுபவம் எவ்வாறு சமூகத்தினை மேம்படுத்தியது எனவும் கூறப்பட்டது. தற்போதைய சிறீலங்கா அரசியல் அவலநிலை பற்றியும், மக்களின் எதிர்காலம் என்னவாகும் எனும் ஏக்கம் கலந்த பேச்சுகளும் இடையிடையே வந்தன.

தன்னை வளர்த்த தந்தையார் அமரர் சட்டத்தரணி கே.சி. நித்தியானந்தா, வேறு உறவினர்கள் காரத்திகேசனுடன் வைத்திருந்த நட்பு, தோழமையைக் கனம் பண்ணியும், தானும் கார்த்திகேசன் மேல் வைத்திருந்த அபிமானத்தால், தனது வேறு கட்சிப் பிரமுகர்களுடன்




நிகழ்ச்சியில் பங்கு பற்ற வந்திருந்த மதிப்பிற்குரிய முன்னாள் அமைச்சரும், இந்நாள் யாழ் நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் கார்த்திகேசனின் படத்திற்கு மாலை அணிவித்து கௌரவித்தார்.

**ஜானகி கார்த்திகேசன் பாலகிருஸ்ணன்**

பேச்சாளர் பட்டியல் இறுதியில் கி.பி.தோழர் இக்காலகட்டத்தில் முற்போக்காளர்களை நினைவுகூருவதன் முக்கியத்துவத்தைத் தெளிவுபடுத்தி, முற்போக்காளர் பட்டியலில் கார்த்திகேசனை முதலிடத்தில் வைத்து இந்நிகழ்ச்சியை ஆரம்பித்து வைத்திருப்பதாகவும், இது போன்று 30 க்கும் மேலுள்ள முற்போக்காளர்களை ஒவ்வொருவராக நினைவுகூரத் திட்டமிட்ட உள்ளதாகவும் தெரிவித்து நன்றியுரையைக் கூறினார்.

கார்த்திகேசன் தனது காலத்தில் சமூகத்திற்கு ஆற்றிய சேவையைக் கனம் பண்ணி, ராஜா கிரீம் ஹவுஸ் உரிமையாளர் மண்டபத்தினை இலவசமாக வழங்கியதுடன், பங்கேற்றோர் அனைவருக்கும் சிற்றுண்டி, குளிர்பானமும் பரிமாற ஒழுங்கு செய்தார்.

கார்த்திகேசனின் முன்னாள் நெருங்கிய கம்யூனிஸ்ட் கட்சித் தோழர் அமரர் குமாரசாமி அவர்களின் புதல்வன், கார்த்திகேசனின் பிறந்த தினமாகிய ஜூன் 25 உதயமாகியவர். அவருடன் தனது இல்லத்தில் ஒவ்வொரு வருடமும் பிறந்ததினத்தை கொண்டாடியவர், இன்று அவுஸ்திரேலியாவிலிருந்து தனது தாய்வழி சிறிய தகப்பனும், முன்னாளில் கார்த்திகேசனின் அயலவரான கோபால் என்பவர் தயாரித்த செப்பிலான உருவப்படத்தை அவர் மூலமாகவே அன்பளிப்பாக அனுப்பி வைத்தார்.

'நூலகம்' நிறுவனத்தினர் கார்த்திகேசன் 25வது ஆண்டு நினைவாக பிரசுரிக்கப்பட்ட நூலினை ஆவணகப்படுத்திய இணைப்பு மண்டபத்தில் காட்சிப்படுத்தப்பட்டது.

வெவ்வேறு விதமாக இந்நிகழ்வில் பங்கேற்றோர் ஒரு நிறைவான நிகழ்ச்சியின் பங்கு கொள்ளக் கிடைத்தது பற்றி திருப்தியுடன் சென்றனர்.

படங்கள் புதிய ஜனநாயக மார்க்ஸிஸ-லெனினிஸ கட்சி, அனு சந்துரு ஆகியோரின் முகநூல்களிலிருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டன.

---

பரலோகத்தில் வினோதார்த்தமான யதார்த்தத்தில் அதிமானுடனைக் காணவிரும்பிய மனிதன், அங்கு தனது சொந்தப் பிரதிபிம்பத்தைத் தவிர வேறு எதையுமே காணவில்லை, தான் தேடுகின்ற இடத்தில் அந்த அதிமானுடன், தன்னையே ஒத்திருக்கும் தோற்றத்தைக் காண்பதன்றி வேறு எதையும் காணுமாறு அவனை இனியும் வற்புறுத்த இயலாது. மனிதன் தனது உண்மையான யதாரத்தத்தையே கண்டறிந்தாக வேண்டும்.

**–மார்க்ஸ்**

**முன்பக்கத் தொடர்ச்சி...**

கூட்டுச்சேராமல் சுயாதீனமாகச் செயற்படுவதால் அவர் வாக்களிப்பில் கலந்துகொள்வதைத் தவிர்த்திருக்கலாம்.

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சிவசக்தி ஆனந்தனும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளவில்லை. அவரது கட்சியான ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி கூட்டமைப்பிலிருந்து விலகிவிட்டதால் அவர் கூட்டமைப்புடன் சேர்ந்து செயல்படுவதைத் தவிர்த்து வருகின்றார்.

வாக்களிப்பில் கலந்து கொள்ளாதவர்களில் பலரினதும் கவனத்தை ஈர்த்தவர் மலையகத்தைச் சேர்ந்த அமைச்சர் வி.இராதாகிருஸ்ணன். அவர் அரசாங்கத்தில் ஒரு அமைச்சராக அங்கத்துவம் வகித்துக்கொண்டே தனது அரசுக்கு எதிராக கொண்டுவரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராக அரசுடன் சேர்ந்து வாக்களிக்காதது ஏன் என்பது பலருக்கும் வியப்பாக உள்ளது.

அதேநேரத்தில், ஆறுமுகன் தொண்டமான் தலைமையிலான இலங்கை தொழிலாளர் காங்கிரசின் இரண்டு உறுப்பினர்களும் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து அரசுக்கு எதிராக வாக்களித்துள்ளனர்.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, ஜே.வி.பி. ஏன் இந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ரணில் அரசுக்கு எதிராகக் கொண்டுவந்தது என்பதும், அதனால் என்னத்தை அது சாதித்தது என்பதும் கவனமாக ஆராயப்பட வேண்டிய விடயங்கள்.

ஏனெனில், 'நல்லாட்சி' என்ற பெயரில் இந்த ஏகாதிபத்திய சார்பு, மக்கள் விரோத அரசாங்கம் 2015 ஒகஸ்டில் ஆட்சிக்கு வந்தது முதல், தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் போன்றே அரசாங்கத்துக்கு பல்வேறு வகைகளில் ஜே.வி.பியும் முண்டுக்கொடுத்தே வந்திருக்கிறது. அரசை எதிர்ப்பதைவிட மகிந்த ராஜபக்ச தலைமையிலான எதிரணியை எதிர்ப்பதிலேயே ஜே.வி.பி. அதிக அக்கறை காட்டி வந்துள்ளது.

கடந்த ஆண்டு (2018) ஒக்ரோபர் மாதம் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அரசியல் அமைப்பு தனக்கு வழங்கியுள்ள அதிகாரத்துக்கு அமைவாக ரணில் விக்கிரமசிங்கவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கவிட்டு மகிந்த ராஜபக்சவை பிரதமராக நியமித்த பொழுது, மேற்கத்தைய ஏகாதிபத்திய சக்திகள், தமிழ் தேசியக் கூட்டமைப்பு, முஸ்லீம் சந்தர்ப்பவாதத் தலைமைகள் என்பனவற்றுடன் சேர்ந்து ஜே.வி.பியும் ஜனாதிபதிக்கு எதிராகவும் ஐ.தே.கவுக்கு ஆதரவாகவும் கைகோர்த்துச் செயல்பட்டது. அது ஜனாதிபதியின் நடவடிக்கைக்கு எதிராக நாடாளுமன்றத்தில் உரத்துக் குரல் கொடுத்ததுடன், அவருக்கு எதிராக நீதிமன்றத்தையும் அணுகியது.

இப்படியாக அரசின் ஐந்தாம்படையாகச் செயற்பட்ட ஜே.வி.பி., திடீரென தலைகீழ் நிலை எடுத்து அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாத் தீர்மானம் ஒன்றைக் கொண்டுவர முயற்சித்தது ஏன் என்ற கேள்வி முக்கியமானது. ரணில் அரசாங்கம் இவ்வருடம் ஏப்ரல் மாதம் ஈஸ்டர் தினத்தன்று முஸ்லீம் பயங்கரவாதிகளால் நடத்திய குண்டுத்தாக்குதல்களை தடுக்கத் தவறியதே தான் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரக் காரணம் என்று ஜே.வி.பி. தனது செயலுக்குக் காரணம் கூறுகிறது. அது உண்மைதானா அல்லது வேறு ஏதாவது மறைமுகக் காரணங்கள் இருக்கின்றனவா?

ஜே.வி.பியின் நடவடிக்கைக்கு சிலர் கூறும் காரணம், கடந்த நான்கரை ஆண்டுகளாக ஜே.வி.பி. அரசுக்கு பலவழிகளிலும் முண்டுகொடுத்து வந்ததால், மக்கள் மத்தியில் அதன் செல்வாக்கு சரிந்துள்ளதுடன், அதன் ஆதரவாளர்கள் மத்தியிலும் அதிருப்தி நிலவுவதால் ஜே.வி.பி. இப்படியொரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைக் கொண்டுவந்து நாடகமாடியுள்ளது என்பதாகும். இதில் ஓரளவு உண்மை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் உண்மை இதுமட்டுமல்ல.

ஈஸ்டர் தின குண்டுத் தாக்குதல்களைத் தொடர்ந்து அதில் சம்பந்தப்பட்டவர்கள் எனக்கருதப்பட்ட சில முஸ்லீம் அமைச்சர்கள் மீதும், ஆளுநர்கள் மீதும் கண்டனக் குரல்கள் எழுந்தன. குறிப்பாக, அமைர்சர் ரிசாத் பதியுதீன் மீது பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு, அவரை அமைச்சர் பதவிலிருந்து நீக்கி, அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. இந்தக் கோரிக்கை ஏறக்குறைய முழுநாட்டு மக்களாலும் முன்வைக்கப்பட்டது. ஆனால் ரணிலின் அரசாங்கம் ரிசாத் மீது நடவடிக்கை எடுக்கத் தயங்கியது. இந்தச் சூழ்நிலையில் ரிசாத் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் எனக்கோரி நாடாளுமன்ற உறுப்பினர் அத்தரலிய ரத்தினதேரர் சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார். அவரது உண்ணாவிரதம் நாட்டு மக்களிடையே அரசுக்கு எதிரான கொந்தளிப்பை உருவாக்கியது.

இந்தச் சூழ்நிலையில்தான், எதிர்க்கட்சி ரிசாத் பதியுதீனுக்கு எதிரான நம்பிக்கை இல்லாத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் முன்வைத்தது. அந்தத் தீர்மானம் முன்னைய நம்பிக்கை இல்லாத் தீர்மானங்களைப் போலல்லாது அரசாங்கத்தின் சில உறுப்பினர்களின் ஆதரவையும் பெற்று வெற்றிபெறக்கூடிய சூழல் தோன்றியது.

ஆனால் ஜே.வி.பி. ரிசாத்துக்கு எதிராக எதிர்க்கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானத்துக்கு எதிராகவே கருத்துத் தெரிவித்து வந்தது. அந்தத் தீர்மானம் முஸ்லீம் மக்களுக்கு எதிரான இனவாதம் என ஜே.வி.பி. விமர்சித்தது. அந்தத் தீர்மானத்தை நீர்த்துப்போக வைத்து அரசாங்கத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் ஜே.வி.பி. அரசாங்கம் பதவி விலக வேண்டும் என்ற இன்னொரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தது. ஜே.வி.பியின் இந்த நடவடிக்கை ஐ.தே.கவின் இன்னொரு சூழ்ச்சி என்பதை ஒருசிலர் மட்டுமே உய்த்துணர்ந்து அம்பலப்படுத்தினர்.

ஆனால் எதிர்க்கட்சி கொண்டுவந்த நம்பிக்கை இல்லாத்தீர்மானம் வெற்றிபெறலாம் எனக்கருதிய அரசாங்கம், முஸ்லீம் கட்சிகளின் தலைவர்களுடன் சேர்ந்து ஒரு சூழ்ச்சித்திட்டத்தைத் தயாரித்து முஸ்லீம் அமைச்சர்கள் அனைவரையும் கூட்டாக பதவி விலக வைத்து எதிர்க்கட்சியின் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை செயலிழக்க வைத்தது.

எதிர்க்கட்சியின் ரிசாத்துக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானம் முஸ்லீம் அமைச்சர்களின் ஒட்டுமொத்த பதவி விலகலால் செயலற்றுப்போய் அரசாங்கம் பாதுகாக்கப்பட்டுவிட்ட சூழலில் ஜே.வி.பி. அரசுக்கு எதிராக போலியாகக் கொண்டுவந்த நம்பிக்கை இல்லாத் தீர்மானம் நிலுவையில் இருந்து வந்தது. அரசாங்கம் தப்பிவிட்டது என்ற காரணத்துக்காக தனது நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஜே.வி.பி. திரும்பப்பெற்றால் ஜே.வி.பியின் கபட நாடகம் அம்பலமாகிவிடும் என்பதால் ஜே.வி.பியால் மேற்கொண்டு எதுவும் செய்ய முடியவில்லை.

இந்தச் சூழ்நிலையில் ஜே.வி.பி. கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது. தமிழ் தேசியக் கூட்டமைப்பின் ஆதரவு இருப்பதால் அரசாங்கம் நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை

சுலபமாகத் தோற்கடித்துவிடும் என்பது ஜே.வி.பிக்கு நன்கு தெரியும்.

ஆனால் ஐ.தே.கவும் ஜே.வி.பியும் சேர்ந்து ஆடிய இந்தக் கபட நாடகத்தில் சிக்கிக்கொண்டது மகிந்த தலைமையிலான எதிர்க்கட்சிதான். அவர்கள் தமது அரச எதிர்ப்பைக் காட்டுவதற்காக ஜே.வி.பி. கொண்டுவந்த அரசுக்கு எதிரான நம்பிக்கையில்லாத் தீர்மானத்தை ஆதரித்து வாக்களித்து தமது தலையில் தாமே மண்ணை அள்ளிப்போட்டுக் கொண்டனர்.

ஜே.வி.பியின் சதி நோக்கத்தை புரிந்துகொண்டதால்தான் சிலர் தமது மனச்சாட்சிப்படி ஜே.வி.பியின் சதியில் அகப்படாமல் தவிர்ப்பதற்காக வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் இருந்திருக்கலாம் என எண்ணுவதில் தப்பில்லை.

மொத்தத்தில் மீண்டுமொருமுறை ரணில் அரசு தமிழ் தேசியக் கூட்டமைப்பினதும் ஜே.வி.பியினதும் உதவியுடன் தனது ஆட்சியைத் தொடர்வதற்கான சூழலை உறுதிப்படுத்தியுள்ளது.

ஆனால் முன்னைய காலங்களைவிட ஒரு வித்தியாசம் என்னவெனில், இம்முறை ஜே.வி.பி. வழமைக்கு மாறாக ரணில் அரசுக்கு எதிராகவும், தமிழ் தேசியக் கூட்டமைப்பு வழமைப்பிரகாரம் அரசுக்கு ஆதரவாகவும் செயற்பட்டு இருவரினதும் ஒரே நோக்கமான ஐ.தே.க. அரசைப் பாதுகாப்பதை நிறைவேற்றியுள்ளன.

# கார்த்தியின் கீர்த்திக்கு வழிவகுத்த வாலாம்பிகை

**தி**ருமதி வாலாம்பிகை, கார்த்திகேசன் என்ற கம்யூனிஸ்ட்டைக் கைப்பிடித்த காலம்முதல் ஒரு பூரண கம்யூனிஸ்ட்டாக வாழ்ந்த உத்தமப் பெண்மணி ஆவார். கம்யூனிஸ்ட் கார்த்திகேசனின் வாழ்க்கையும், வாலாம்பிகை கார்த்திகேசனின் வாழ்க்கையும் ஒன்றே ஒன்று. அவற்றைப் பிரித்துப் பார்க்க முடியாது.

கம்யூனிஸ்ட் என்ற முறையில் கார்த்திகேசன் பூரணமானதோர் வாழ்க்கை வாழ உதவியவர் திருமதி வாலாம்பிகை ஆவார். கம்யூனிஸ்ட் கட்சியினர் தேர்தல் கூட்டங்களில் உரையாற்றித் தேர்தல் வேலைகளில் ஈடுபட்டது தவிர, அவர் நேரடியாக அரசியல் வேலைகளில் ஈடுபடவில்லை. ஆனால் அவருடைய குடும்ப வாழ்வின் ஒவ்வொரு கணமும் அரசியல் மூச்சுப்பட்டதாகவே அமைந்தது.

1940~ம் ஆண்டுகளின் ஆரம்பத்தில் கார்த்திகேசனின் துணைவியாகியது முதல் அக்காலக் கம்யூனிஸ்ட்டுகள் அனுபவித்த அத்தனை இடர்களையும் அவரும் அனுபவித்தார். இறக்கும்போதும் சொந்த வீடற்றவராகவும், நகைநட்டு அற்றவராகவுமே அவர் இருந்தார்.

35 ஆண்டுகளாக அவர் வீட்டுப் பாரத்தைப் பொறுப்பேற்று நடத்தினார். கிடைத்த வருமானத்தைக் கொண்டு அவர் குடும்ப நிர்வாகத்தைத் திறம்படச் செய்தார். ஓய்வு ஒழிச்சல் இல்லாது வந்துகொண்டேயிருந்த விருந்தினர்களை உபசரித்தல், பிள்ளைகளை வளர்த்துக் கல்வி அளித்தல், நிதி நிலைமைக்கு ஏற்பப் பொருள்களை வாங்கிக் குடும்பத்தை நடத்துதல் ஆகிய அனைத்தையும் அவரே கவனித்தார். கார்த்திகேசனின் குடும்ப வாழ்க்கையின் சிறப்பு அனைத்தும் திருமதி வாலாம்பிகைக்கே உரியதாகும்.

திருமதி வாலாம்பிகை இன, மத, சாதி பேதங்களைப் பாராட்டாத ஒரு பெண்மணி ஆவார். இன்னும் கூறுவதென்றால், ஏழைகள், தொழிலாளர்கள்பால் அவர் அபரிமிதமான அன்பும், கருணையும் காட்டினார். அவர்களுடைய குழந்தைகளையும் அன்புடன் கவனித்தார்.

தனது இறுக்கமான பொருளாதார நிலையிலும் கஷ்டப்பட்ட உறவினரினர் பிள்ளைகள் பலரைத் தம்முடன் வைத்து வளர்த்துக் கல்வியூட்டியதுடன், பல ஏழைப் பிள்ளைகளுக்குக் கல்விக்காகப் பண உதவியும் புரிந்தார். நோயுற்றிருந்த இறுதிக் காலத்தில் கூட அவர்களுடைய 1943-ம், 1944-ம் ஆண்டுகளின் கம்யூனிஸ்ட் கட்சி வாழ்க்கையை நினைவூட்டிய போதெல்லாம் அவருடைய கண்களில் பிரகாசமான ஒளி வீசியதை அவதானிக்க முடிந்தது.

கார்த்திகேசன் மாஸ்ரரைப் போலவே நகைச்சுவையாகப் பேசும் திறமை படைத்தவர் திருமதி வாலாம்பிகை. சில வேளைகளில் மிகவும் காரமாகவும் அவருடைய நகைச்சுவை அமைந்துவிடும். மார்க்ஸிஸம் பேசும் ஒருவர் தாடியுடனர் வந்தார்.

'தாடி வைத்தால் எல்லோரும் மார்க்ஸிஸவாதியாகிவிட முடியுமா' என்றார் திருமதி வாலாம்பிகை,

போலிகளைக் கண்டுணரும் திறமை திருமதி வாலாம்பிகை அவர்களிடம் அமைந்திருந்தது. ஆனால் கட்டுப்பாடு கருதி தமது கருத்துக்களைக் கட்டுப்படுத்திக் கொண்ட பெண்மணி ஆவர்.

---

குறிப்பு: இக்கட்டுரை பிரான்சில் வெளியிடப்பட்ட 'கம்யூனிஸ்ட் இயக்க வளர்ச்சியில் தமிழ்ப்பெண்கள்' என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டதாகும். சர்வதேச மாதர் தினத்தையொட்டி, 2000 ஆம் ஆண்டு 'கம்யூனிஸ் இயக்க வளர்ச்சியில் தமிழ்ப்பெண்கள்' என்ற தொடர் தினக்குரல் ஞாயிறு பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதாகும். சீன வானொலியிலும், அயல்மொழிப் பதிப்பகத்திலும் சுமார் 16 வருடங்கள் தமிழ்ப்பணியாற்றிய தோழர் வீ. சின்னத்தம்பி அவர்கள் இதனை எழுதியுள்ளார்.

கம்யூனிஸ்ட் இயக்கத்தின் வளர்ச்சிக்கென, ஆரம்ப காலத்தில் எத்தனையோ பெண்கள் தமது கணவன்மாருடன் இணைந்து தொண்டாற்றியுள்ளனர். அவர்கள் தமது சொத்துச் சுகம் எல்லாவற்றையும் இழக்க நேரிட்டும், அவதூறுகளையும் பழிப்புரைகளையும் கேட்க நேரிட்டும், கலக்கமின்றி, கொண்ட கொள்கையில் ஈடாட்டமின்றி இலட்சிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள்.

கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளராக, உறுப்பினராக யாழ்ப்பாணச் சமூகத்தில் வாழ்வது என்பது வாழ்க்கையில் எதிர் நீச்சல் அடிப்பதாகும்.

தமது கொள்கையில் இறுதிவரை வழுவாது, எத்தனை துயர்வரினும் ஏற்று இலட்சிய வாழ்வு வாழ்ந்தவர்களுடைய வாழ்வின் பின்னால் அவர்களது மனைவிமாருக்கும் சமபங்கு உண்டு என்பதை மறுக்க முடியாது.

அந்த வகையில் இலட்சிய வாழ்க்கை வாழ்ந்தவர்கள், கணவர்மாரின் கம்யூனிஸட் இயக்கப் பணிகளுக்கு அன்று உறுதுணையாகவிருந்து உதவிய மாதரசிகள் சிலர் குறித்து தோழர் வீ. சின்னத்தம்பி சுருக்கமாக எழுதியுள்ளார்.

தோழர் வீ. சின்னத்தம்பி *17.04.2001* இல் காலமாகிவிட்டார்.

# 2019 ஜனாதிபதி தேர்தல் மூலமும் நாட்டின் நெருக்கடி நிலை தீராது!

**– கூறுகிறார் டியு குணசேகர**

"நமது நாடு ஆழமான அரசியல் நெருக்கடிக்குள் சிக்கிக்கொண்டுள்ளதால் 2019இல் நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் மூலம் கூட நாட்டில் ஸ்திரத்தன்மையை மீட்டுவிட முடியாது" இவ்வாறு கூறியிருக்கிறார் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் பொதுச்செயலாளர் தோழர் டியு குணசேகர.

டியு குணசேகரவின் 60 ஆண்டுகால அரசியல் பங்களிப்பைக் கௌரவிக்குமுகமாக கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் அவர் பேசும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கிறார். மேலும் அவர் அங்கு உரையாற்றுகையில்,

"நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றிணைந்து காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாது விட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படுவதைத் தவிர்க்க முடியாது.

தேசியப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் தேசியத் தலைமை ஒரு ஆக்கபூர்வமான கொள்கையைப் பின்பற்றும் என நம்புகிறேன். நாடாளுமன்றம் இன்று ஒரு குழப்பமான சூழ்நிலையில் உள்ளது. பிரச்சினைகளைக் கையாள்வதில் உறுப்பினர்கள் ஆற்றல் அற்றவர்களாக உள்ளனர். தற்போதைய நெருக்கடிக்கு ஜனாதிபதிக்கும் பிரதமருக்கும் இடையில் நிகழும் மோதலும் ஒரு காரணம்.

நாட்டில் அதிகாரத்தில் இருப்பவர்கள் வெளிநாட்டுச் சக்திகள் நமது நாட்டில் செயல்படும் விதங்கள் குறித்து பாராமுகமாக இருந்து வருகின்றனர். உலகளாவிய நெருக்கடிகள் குறித்து இலங்கை பாராமுகமாக இருந்துவிட முடியாது.

இன்று நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற அரசியல் கட்சிகள் அனைத்தினுள்ளும் தலைமைத்துவப் போராட்டங்கள் நடக்கின்றன. இந்த தலைமைத்துவப் போராட்டங்களும், நாடாளுமன்ற நெருக்கடிகளும் நாட்டின்



அனைத்துத்துறைகளையும் பாதித்துள்ளன.

வடக்கு கிழக்கில் ஆரம்பிக்கப்பட்ட ஆயுதப்போராட்டத்தின் காரணமாக அங்கு பல அரசியல் தலைவர்கள் கொலை செய்யப்பட்டனர். அவர்களில் கிழக்கைச் சேர்ந்த ஆர்.சம்பந்தன் மட்டுமே உயிர்தப்பிப் பிழைத்திருக்கிறார். கிழக்கு மக்களின் இன்னொரு தலைவரான எம்.எச்.எம். அஸ்ரப் துரதிஸ்ட்டவசமாக 2000 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 16இல் நடைபெற்ற இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமான விபத்தில் கொல்லப்பட்டுவிட்டார்.

தெற்கிலும்கூட லலித் அத்துலத்முதலி, காமினி திசாநாயக்க போன்ற தலைவர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1987இல் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் 13ஆவது திருத்தச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்ட போது அதை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்ததிற்காக எமது தோழர்களில் 50 பேர்வரை ஜே.வி.பியினரால் கொலை செய்யப்பட்டனர்"

இவ்வாறு டியு தனது பேச்சின்போது குறிப்பிட்டார்.

தோழர் டியு குணசேகரவை கௌரவிக்க நடந்த இந்த நிகழ்வில் முன்னாள் நேபாளப் பிரதமர் மாதவ் குமார் பிரதான உரையை நிகழ்த்தினார்.

இந்நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, நாடாளுமன்ற சபாநாயகர் கரு ஜெயசூரிய ஆகியோருடன் அனைத்துக் கட்சிகளையும் சேர்ந்த முக்கிய தலைவர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன லண்டனுக்கு தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்ததால் நிகழ்வில் கலந்துகொள்ள முடியாத அவர், டியு குணசேகரவின் 60 ஆண்டுகால அரசியல் பணிகளைப் பாராட்டி வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பியிருந்தார். அவர் தனது வாழ்த்துச் செய்தியிலும் இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி பலத்த நெருக்கடிக்கு மத்தியிலும் 13ஆவது திருத்தச் சட்டத்தை ஆதரித்ததை நினைவுகூர்ந்து பாராட்டியிருந்தார்.

இந்த நிகழ்வில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச, டியு குணசேகர தனக்கு சொன்ன அறிவுரையைக் கேட்காமல் இரண்டு வருடங்கள் முன்னதாக 2015இல் ஜனாதிபதித் தேர்தலை நடத்தியதின் மூலம் அதிக விலையைக் கொடுத்துவிட்டதாக தனது ஆதங்கத்தை வெளிப்படுத்தினார்.

மேலும் அவர் கூறுகையில், டியு குணசேகர 'கோப்' குழுவின் தலைவராக இருந்தபொழுதே முதன்முதலாக மத்திய வங்கி பிணைமுறி மோசடி விவகாரம் அவரால் அம்பலப்படுத்தப்பட்டது என்பதையும் சுட்டிக்காட்டினார்.

---

ஜூலை மாத இறுதி வாரத்தில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்துக்கு வருகைத்தந்திருந்த பெயர் குறிப்பிடப்படாத விமானம் தொடர்பில் எந்தவிதமான தகவல்களும் இதுவரை வெளியிடப்படாத நிலையில், அரசாங்கம் இதுகுறித்த தகவல்களை உடனடியாக வெளியிட வேண்டுமென, ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் திலங்க சுமதிபால பகிரங்கமாக தெரிவித்துள்ளார்.